பொதுசன நூலகம்
படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 15 செவ்வாய்க்கிழமை (29.03.2011) பக்கங்கள் 12 ஓசை – 180

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA



(C/490)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

# ஏ-9 வீதியை புனரமைக்க ஜனாதிபதி மஹிந்த பணிப்பு

## அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு கைமேல் பலன்



(கொழும்பு)

புலிகளுடனான யுத்தம் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஏ-9 வீதியை நவீன முறையில் புனரமைப்புச்செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக யாழ். கண்டி பிரதான வீதியான ஏ-9 வீதியின் திருத்தப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடற்பரப்பில் வைத்தே வல்வை மீனவர்கள் கைதாகினர்

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கை

(கொழும்பு)

இந்தியக்கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளையே வல்வெட்டித்துறையைச்சேர்ந்த மூன்று மீனவர்களுக்கும், இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் உத்தியோகபூர்வ அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாணம்-வல்வெட்டித்துறையைச் (11 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை விரைவில்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை மே மாதம் 15 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஒருங்கிணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஆணைக்குழு திட்டமிட்டபடி வடக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதியில் மக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டு சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளது.பொலன்னறுவை மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு காரணமாக அங்குள்ள (11 ஆம் பக்கம் பார்க்க)

## அனல் மின்நிலையத்துக்கு ஆபத்து; பாதுகாப்பைப் பலப்படுத்த ஏற்பாடு

### கடற்படையின் சிறப்பு அணி களமிறங்கும்

(கொழும்பு)

நுரைச்சோலையில் உள்ள அனல் மின்நிலையத்துக்கு ஆபத்து நேரிடலாம் என்று அரசுக்குக்கிடைத்த இரகசியத்தகவலைத்தொடர்ந்து அதன் பாதுகாப்பு தற்போது கடற்படையின் விசேட படையணியிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

நுரைச்சோலையில் உள்ள முதலாவது அனல் மின்நிலையத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக இலங்கை பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதனால் இந்த அனல் மின் நிலையத்தின் பாதுகாப்பை கடற்படையிடம் ஒப்படைப்பது குறித்து அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயர்நிலை கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டுள்ளது.


அண்மையில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட 'லக்விஜய' என்ற இந்த அனல் மின் நிலையம் தற்போது பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளது.

900 மெகாவாற் உற்பத்தித் திறனுடன் அமைக்கப்படும் இந்த அனல் மின்நிலையத்தின் முதலாவது கட்ட கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு – புலம்பெயர் தமிழர் அனுசரணைக்கு மூன்றாம் தரப்பின் தலையீடு தேவையற்றது

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், புலம் பெயர்ந்த தமிழர்களுக்குமிடையே அனுசரணைப்பணியை மேற்கொள்ளமூன்றாம் தரப்பின் தலையீடு தேவையற்றதென ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதியும், மின்சக்தி, எரிசக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கத்துக்கும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை தமிழ் மக்களுக்குமிடையில் சிறந்த தொடர்புகளும் உறவுகளும் பேணப்பட்டு வருகின்றன. அதற்கு இடையில் மற்றுமொரு தரப்பு தொடர்புகளை ஏற்படுத்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற அவசியமில்லை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தியமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இந்த விடயத்தில் ஏற்பாடுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பெருநகர கூட்டுத்தாபனத்தின் ஆளுனராக கோத்தபாய நியமனம்?



(கொழும்பு)

உருவாக்கப்படவுள்ள கொழும்பு பெருநகர கூட்டுத்தாபனத்தின் ஆளுனராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேச ஆளுனர் பதவியானது பிரதமரின் அதிகாரங்களையொத்த அதிகாரங்கள் மற்றும் செல்வாக்கைக் கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்படவுள்ளது. அதன் மூலம் கொழும்பு பெருநகர எல்லைக்குள் வரும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆளுனரின் கீழ் செயற்பட வேண்டியேற்படும்.

அத்துடன் கொழும்பு பெருநகர ஆளுனர் பதவியானது அப்பிரதேசத்தின் அனைத்து சிவில் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தலைமைப்பதவியாக அமையவுள்ளது. அப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் எந்தவொரு சொத்தையோ அல்லது கட்டடத்தையோ அரசாங்கத்துக்காக சுவீகரிக்கும் அதிகாரம் ஆளுனருக்கு வழங்கப்பட்டிருக்கும்.

அதன் மூலம் கொழும்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் சனப்பரம்பலைக் குறைப்பதுடன், தென்னிலங்கை சிங்கள மக்களை அங்கு குடியமர்த்துவதற்கான கட்டற்ற (11 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச ஊடகவியலாளர்களை ஜனாதிபதி நேற்று சந்தித்தார்



(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த ஆலோசனைக் குழு, இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்யமுடியும். எனினும் அவர்கள் இலங்கையில் விசாரணை எதையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய பேருந்து கைதடிப் பாலத்தில் நால்வரைக் காயப்படுத்தியது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றி வந்த தனியார் பேருந்து கைதடிப்பாலத்தில் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி எதிரே வந்த வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 6.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கைதடிப் பாலத்தினூடாக கடும் வேகத்துடன் வந்த தனியார் பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை மீறி யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஹயர்ஸ் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தவிபத்தில் யாழ்.நகரிலிருந்து தம்புள்ளைக்கு ஹயர்ஸ் வாகனத்தில் சென்று கொண்டிருந்த சுண்டிக்குளியைச் சேர்ந்த சகுந்தரி வெட்சன் (வயது-62), மானிப்பாயைச் சேர்ந்த ரூபேந்திரராசா லைசஜா (வயது-30) ஆகிய இருவரினதும் இடது முழங்காலிற்கு கீழ் முறிவு ஏற்பட்டுள்ளது. அத்துடன், இணுவிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இணுவிலைச் சேர்ந்த தவனேஸ்வரன் தவபாலன் (வயது-31), இவருடைய மகள் தாருண்யா (வயது-02) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்து சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இச்சம்பவம் தொடர்பாக கைதடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12, பா)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு முப்பது ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

'அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரம் மூலம் மணல் ஏற்றிச் சென்ற ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த அந்நபரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிபதி குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், செலுத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்ததுடன், வாகன உரிமை தொடர்பான விசாரணை எதிர்வரும் 4ஆம் திகதி மேற்கொள்ளப்படும் எனக் கூறித் தீர்ப்பளித்தார். (11)

## காரைநகரில் கைகலப்பு; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்துள்ள நிலையில் ஒருவர் சிசிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தன்னிடம் கடன் வாங்கிய மூவாயிரம் ரூபாவைத் திருப்பிக் கேட்கச் சென்றபோது கடன்வாங்கியவரும் அவரது மனைவியும் இவரைக் கட்டி வைத்து தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகர் ஊரிகளப் பூமியைச் சேர்ந்த வேலாயுதம் அம்பிகைவானன் (வயது-40) என்பவரே தாக்கப்பட்டவராவார். இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (மி)

**சிறு விளம்பரம்**

**விற்பனைக்குண்டு**

Sharp குளிர்சாதனப்பெட்டி, 14" கலர் T.V (Panasonic) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

T.P - 0772575246 R/602

# கடல்சார் உணவு வகைகள் திருட்டு

# கடல்தொழிலாளர் சங்கம் கவலை

## தடுத்து நிறுத்த அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடல் நீரேரியில் சிறகு வலைத்தொழிலில் ஈடுபடும் பாசையூர் மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்கள், கடலுணவுகள் முதலியவை வெளியூர் திருடர்களால் அபகரித்துச் செல்லப்படுவதாக பாசையூர் கடற்தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த பத்து மாத காலப் பகுதியில் இவ்வாறான வெளியூர் திருடர்களின் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.கடல் நீரேரியில் சிறகு வலைத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் வலைகள், தடிகள், பைப்புகள் மற்றும் கூடுகளில் உள்ள கடலுணவுகள் என்பனவே திருடர்களால் அபகரித்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக பாசையூர் அந்தோனியார் கடற்தொழிலாளர் சங்கம் யாழ்மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும், யாழ்.மாவட்ட கடல்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரவீந்திரனுக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பாசையூர் மக்களில் 90 வீதமான மக்கள் சிறகு வலைத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். சிறகு வலைத்தொழில் ஏனைய கடற்தொழில் நடவடிக்கையில் இருந்து வேறு பட்டுள்ளது. அதாவது, ஏனைய தொழில்கள் ஒரு முறை தொழிலுக்குச் சென்றால் தொழிலை முடித்துவிட்டு உபகரணங்களையும், ஏனையவற்றையும் தம்முடன் எடுத்து வந்துவிட முடியும். ஆனால், சிறகு வலைத் தொழில் அப்படியல்ல ஏறக்குறைய 15 நாட்கள்வரை அவை கடலிலேயே விடப்பட்டிருக்கும். அன்றைய தொழில் முடிவுற்றதும் கடலுணவை எடுத்துக்கொண்டு தொழிலாளர் வீடு வந்துவிடுவர். பின்னர் மறுநாள்தான் சென்று தொழி லில் ஈடுபடுவர். இதன் காரணமாக எமது சிறகு வலை உபகரணங்களும், கடலுணவுகளும் வெளியூர் திருடர்களினால் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 10 மாதங்களாக இந்த நடவடிக்கை உச்சக்கட்டத்தில் உள்ளது. இதனால் இப்பகுதி மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இக்களவுகளை நிறுத்தும் முகமாக தங்களது தலைமையில் சகல கடற்தொழில் சங்கங்களையும் அழைத்துக் கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (பா)

## வடமாகாணத்தின் பாடசாலைகளுக்கு "க்ரியா"வின் தமிழ் அகராதி நூல்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் வட மாகாணப் பாடசாலைகளுக்கு "க்கிரியா"வின் தமிழ் அகராதி நூல் நேற்று வழங்கப்பட்டது.

வட மாகாணப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக சுமார் 3,000 நூல்கள் 10 மில்லியன் ரூபா செலவில் அச்சிடப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ் ஆளுநருடன் தொடர்புகொண்டு வடமாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இந்நூல்களை வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆளுநரினால் இந் நூல்கள் நேற்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வைத்து பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மி)

## கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தின் சகல அதிபர்களுடனும், மாவட்ட நீதிபதியுடனுமான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

## அனுமதியின்றி யூஸ் விற்பனை குருநகரில் சிக்கினர் எண்மர்

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி யூஸ் விற்பனையில் ஈடுபட்டு வந்த எட்டுப் பேர் குருநகர் பகுதியில் யாழ். மாநகர பொதுச்சுகாதாரப் பிரிவினரிடம் சிக்கினர்.

கடந்த இரண்டு வாரங்களில் குருநகர்ப் பகுதியில் யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது இந்த எட்டுப் பேரும் அனுமதியின்றி யூஸ் விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (பா)

**மனோதத்துவ வைத்தியம்**

**GENERAL PSYCHOTHERAPHY**

**யாழ்ப்பாணத்தில்**

**27.03.2011 - 05.04.2011 வரை**

அகில உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்கு புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குழந்தைப்பாக்கியம் இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

தொடர்புகளுக்கு :
கமல் ரூரிஸ்ற் இன்
392/A மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)

தொ.இல : 0214922403
Hotline : 0719315664
0777569205

C/632

கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT பட்டம் பெறும் எமது நிறுவன மாணவர்கள்

BIT



எமது நிறுவனத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT பட்டம் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

BIT : P.Kobikrishna, J.Satheeshan, R.Naresh

--Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும்.MCS

**BIT?** கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L 2010 தோற்றியோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DIT ம் , 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் பயில முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 75,000 ரூபா மட்டுமே.

**MCS?**
- ஐநா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு

**BIT @ MCS?**
- * ICDL (International Computer Driving License)
- * OCJP (Oracle Certified Java Programmer)
- * MCSE (Microsoft Certified Systems Engineer)
- * BCS (British Computer Society)
- CCNA (Cisco Certified Network Associate)

100% *OFF

SMS your name & course to 0772 395 895

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764

பதிவுகள் 01.04.2011க்கு முன்னர்

C/514

குடிப்பழக்கம் எந்த ஒரு கெட்ட குணத்தையும் உருவாக்கவில்லை. ஆனால் உள்ளுக்குள் இருக்கும் கெட்ட எண்ணங்களை எல்லாம் குடிப்பழக்கம்தான் வெளிப்படுத்துகிறது.

-செனகா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சமையல் கட்டுவரை செல்லுங்கள்

யுத்த அழிவுகள், இயற்கை அழிவுகள் போன்ற சவால்களுக்கு முகம்கொடுத்து அவற்றிலிருந்து மீண்டு வந்த தமிழ்மக்கள் தற்போது செயற்கை அழிவுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் ஆளாகி அவலங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழலைப் பயன்படுத்தி வர்த்தக ரீதியிலான பல்வேறு நிறுவனங்கள் குடாநாட்டில் கால் பதித்துள்ளன.

இவற்றில் உற்பத்தி நிறுவனங்களாயினும் சரி, நிதி நிறுவனங்களாயினும் சரி அவற்றினால் இப்போதைக்கு மக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே உள்ளன என்று கூறலாம்.

ஆனால் மக்களின் அத்தியாவசியமான சில தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மாவட்டத்தின் பல பகுதிகளிலும், பழைய உணவுச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டும் புதிய உணவுச் சாலைகள், விடுதிகள் அமைக்கப்பட்டிருப்பதையும் பரவலாகக் காணமுடிகிறது.

வருமானத்தை இலக்காகக் கொண்டு இவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இவற்றின் தோற்றப்பாடு பகட்டாகக் காட்சி தரும் அதேவேளை சுகாதாரமான செயற்பாடுகளில் ஐயம் கொள்ள வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மக்களுடைய அதிகளவான தேவைகளைப் பூர்த்தி செய்வதில், உணவுச் சாலைகளும் பூட்சிற்றிகளும் பெரும் பங்காற்றி வருவதைக் காணமுடிகிறது.

சாதாரணமாக கேக் வகைகளிலிருந்து இறைச்சி வரை கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை மக்கள் கொள்வனவு செய்யும்போது உற்பத்தி திகதியையோ காலாவதியான திகதியையோ பார்த்து வாங்குவதில்லை.

இதேபோல்தான் உயிர்காக்கும் மருந்து வகைகள், குளிர்பானங்கள், பால்மா வகைகள் என்பன காலாவதியான பின்னும் விற்பனைக்கு வருவதால் மக்களே பெருமளவு பாதிப்படைகிறார்கள் என்பதை நிறுவனங்களின் உரிமையாளர்கள் உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள்.

இதற்கு நாம் அவர்களைக் குறை கூறிப் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை. மாறாக இதற்குரிய நடவடிக்கைகளை உரியவர்கள் அவசியம் எடுக்கவேண்டும்.

யாழ்.நகரில் உள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் குளிரூட்டிக்குள் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 235 கிலோ நிறையுள்ள இறைச்சி வகைகள் மாநகர சபை சுகாதாரப் பகுதியினரின் கையில் சிக்கி உரிமையாளர் எச்சரிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒருபானை சோற்றில் ஒரு சோற்றைப் பதம் பார்ப்பது போல், சுகாதாரப் பகுதியினர் நின்றுவிடாது குடாநாட்டில் உள்ள அனைத்து உணவகங்கள், விருந்தினர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் சமையல் கூடங்களை வைத்திருக்கும் அனைத்து நிறுவனங்கள் மீதும் பரிசோதனைகளை மேற்கொண்டு இவர்களின் அவலத்தில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும்.

டெங்கு ஒழிப்பு வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுகாதார சீர்கேட்டுடன் காணப்பட்ட பாடசாலை அதிபர்களை சட்டத்தின் முன் நிறுத்தியதுபோல சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படும் உணவுச்சாலை உரிமையாளர்கள் சட்டத்தின் முன்னிலையில் நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உணவுச்சாலைகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை நடவடிக்கைகள் சமையல் கட்டுப் பக்கம் வரை விஸ்தரிக்கப்படும் போது பல சுகாதாரச் சீர்கேடுகளை காணக்கூடியதாக இருக்கும்.

அப்பாவிப் பொதுமக்களின் விலைமதிப்புள்ள உயிர்களுடன் விளையாடக்கூடிய எத்தகைய செயலிலும் எவரும் ஈடுபடாது மக்களைக் காப்பாற்றும் அனைத்து வழிகளையும் மனிதாபிமானத்துடன் கையாளவேண்டும்.

-ஆசிரியர்-

# பாலங்கள் புனரமைப்புப் பணியால் வீதி அகலிப்புப் பணிகளில் தாமதம்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் பாலம் புனரமைப்பினாலேயே தாமதம் ஏற்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கோப்பாய் சந்திக்கு அப்பால் இரண்டு பாலங்களின் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தப் பாலங்களின் புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்றதும் அகலிப்பு மற்றும் வீதிப் புனரமைப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் கோப்பாய் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில் உள்ள அனேகமான குடியிருப்பு மதில்கள் மற்றும் கட்டடங்கள் என்பன உடைக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. (வி)

## குடிநீர் பெறுவதில் மக்கள் சிரமம்; வீதிப்புனரமைப்பு வேலைகளும் தாமதம்

(பூநகரி)

கிளிநொச்சியிலிருந்து பூநகரி வரை மின்சார விநியோகம் வழங்குவதற்கான ஆரம்பகட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி, ஆலங்கேணி, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் மின்சார வயர் இணைப்புக்கள் இடம்பெற்று வருவதாகவும், விரைவில் பூநகரிப் பிரதேசத்திற்கு மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பூநகரியில் சில பிரதேசங்களில் வாழும் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் செட்டிகுறிச்சி கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கடுக்காய் தீவு, ஞானிமடம் ஆகிய பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை காணப்படுவதாகவும், பொதுமக்கள் 4 கிலோமீற்றர் தூரம் சென்றே குடிநீரைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட சில வீதிகளும் புனரமைக்கப்பு வேலைகள் பூர்த்தியடையாமல் இருப்பதாகவும், அதனால் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதிகளைச் செப்பனிடுவதற்கு கிரவல் மண் பறிக்கப்பட்டு அவை வீதிகளில் போட்டுப் பரவிச் சமப்படுத தப்படாமல் வீதிகளில் குவித்துக் காணப்படுவதால் வாகனங்கள் இவ்வீதியால செல்வதற்குத் தடை ஏற்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், ஒரு மாத காலமாகியும் இதுவரை புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## உங்களுக்குத் தெரியுமா? மாணவர்களுக்கான போட்டி

(பருத்தித்துறை)

மத்திய கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு அமைவாகப் பாடசாலை மாணவர்களுக்கான "உங்களுக்குத் தெரியுமா?" போட்டி பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளா வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதில் பாடசாலை மட்டப் போட்டியை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடத்தி, போட்டியாளர்களைத் தெரிவு செய்து கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும்.

இப்போட்டி தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எழுத்துப் பரீட்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலைமட்ட வினாப்பத்திரங்கள் மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (109)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் காசநோய்த் தாக்கத்துக்கு உள்ளாகினர்

## காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் நடைபெற்ற யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்த காலப் பகுதியில் பலர் காசநோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள்.

யாழ்.மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

சர்வதேச காசநோய் தினத்தையொட்டி கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இம் மக்கள் கணவனை, பிள்ளைகளை, பெற்றோரை என குடும்பத்தில் பலரை இழந்த கவலையில் உள்ள இவர்கள், இவ்வாறான நோய்த்தாக்கத்தைக் கவனத்தில் எடுக்காது இருக்கின்றனர்.

இப்பகுதியில் காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. தற்போதும் போரின் போது பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது வேதனையான விடயமே. இந்நோய் குணப்படுத்தக் கூடியதாக இருந்தும் மக்கள் இதனைக் குணப்படுத்த முயற்சிக்காது இருந்தால் அது குடும்ப அங்கத்தவர்களையும் பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வடதாரகைக்காக துறைமுகப் பகுதியை ஆழமாக்குவதற்கான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுத் துறைமுகப் பகுதியை ஆழமாக்கி புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்த வடதாரகை என்ற பயணிகள் படகு கடந்த ஒரு மாத காலமாக சேவையைத் தொடர முடியாமல் தரித்து நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இத் துறைமுகப் பகுதி ஆழம் குறைந்து காணப்படுவதனால் சம்பந்தப்பட்ட படகு கரைக்குவர முடியாத நிலையிலுள்ளது.

இதனையடுத்துத் துறைமுகப் பகுதியை உடனடியாக ஆழப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## பன்றித் தலைச்சியில் 2ஆவது பங்குனித் திங்கள் நேற்று பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

2ஆவது திங்களான நேற்றைய தினம் பெரும் எண்ணிகையில் பக்தர்கள் கலந்துகொண்டு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் என்பன இடம்பெற்றதுடன், பக்தர்களும் கற்பூரச் சட்டி, பாற்குடம், காவடி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வழிபட்டனர்.

இந்த ஆலயத்திற்குச் செல்வதற்கு அரச, தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளதால் இலகுவாக ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள வசதியாகவுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (2)

# பழுதடைந்த இறைச்சிவகைகள் ஹோட்டல் குளிரூட்டியிலிருந்து மீட்பு

## யாழ்.மாநகர பொதுச் சுகாதாரப் பகுதியினர் அதிரடி நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரபல ஹோடடல் ஒன்றில் கடந்த சனிக்கிழமை அன்று திடீர் பரிசோதனை மேற்கொண்ட யாழ்.மாநகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கிருந்து சுமார் 235 கிலோ நிறையுடைய பாவனைக்குதவாத இறைச்சியைக் கைப்பற்றினர்.

சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த இறைச்சி வகைகளில் மாட்டிறைச்சி, கோழியிறைச்சியுடன் பசு மாட்டிறைச்சியும் சேர்த்து குளிரூட்டியில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அவ் இறைச்சி வகைகளில் பொது சுகாதாரப் பரிசோதகரின் இலட்சனை பொறிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிய் வந்தது.

இதனை அடுத்து சந்தேகித்த குறித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இறைச்சியினை பரிசோதித்த போது அவை பாவனைக்கு உதவாமல் பழுதடைந்ததுடன் துர்நாற்றமும் வீசியதை அடுத்து அதை உடனடியாகக் குழி வெட்டிப் புதைத்துள்ளனர்.

அத்துடன் இச்சம்பவம் முதலாவது சம்பவம் என்பதால் குறித்த ஹோட்டல் உரிமையாளர் எச்சரிக்கப்பட்டதுடன் வரும் காலங்களிலும் இவ்வாறான செயல்களில் ஈடுபடும் பட்சத்தில் ஹோட்டல் நடத்துவதற்கான அனுமதி ரத்துச் செயயப்படும் எனவும் யாழ்.மாநகரப் பொதுச் சுகாதாரப் பகுதியினரால் எச்சரிக்கப்பட்டார்.

மேலும் யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரியான கிசோக்குமார் மற்றும் பெடினெக்ஸ் ஆகியோர் இந் நடவடிக்கையை மேற்கொணடனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

# பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்குடன் விசேட கற்றல் செயற்பாடுகள்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் 2011 இல் க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட கல்விக் கருத்தரங்குகளையும் மீட்டல் வகுப்புக்களையும் தினமும் மாலை வேளைகளில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் வி.நற்குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவை வழமையான வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட வகையில் மாணவர்கள் பெற்றோர்கள் இணைந்து திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இச்செயற்பாடுகள் ஊடாக மாணவர்களின் பாடரீதியான ஈடுபாடு அதிகரித்து வருவதாகவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பெற்றோர்களின் பங்களிப்பு உயர்ந்துள்ளதாகவும் இதனூடாக கல்விப் பெறுபேறுகளில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (109)

# கம்பன் கழகம் நடத்தும் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்திலும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகத்தினால் இவ்வாண்டு கம்பன் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் பேச்சு, கவிதைப் போட்டிகள் யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து அதிகளவில் போட்டியாளர்கள் விண்ணப்பித்துள்ளதால் இப்போட்டிகள் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல, 300 கோயில் வீதி, நல்லூர். என்னும் முகவரியில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கான அனுமதியட்டைகள் போட்டியாளர்களின் முகவரிகளுக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியாளர்கள், அவ்வனுமதி அட்டைகளுடன் போட்டி மண்டபத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகளுக்கு விண்ணப்பித்தோர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடினும் தக்க சான்றுகளுடன் நேரடியாகப் போட்டி மண்டபத்திற்கு வருகை தரலாம் எனக் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

பேச்சு மற்றும் கவிதைப் போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் தரமான நடுவர் குழுவி னால் தெரிவு செய்யப்பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது. மேலும், போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் கழக நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோழிமுட்டை விலை வீழ்ச்சி; ச.தொ.ச வில் பதினொரு ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கோழிமுட்டையின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பதினேழு, பதினெட்டு ரூபாவுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்த கோழிமுட்டை பதின்மூன்று ரூபா முதல் பதினான்கு ரூபா வரை பெரிய பண்ணைகளிலும், சில்லறை விற்பனை நிலையங்களிலும் தற்போது விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள ச.தொ.ச. விற்பனை நிலையத்தில் கோழி முட்டை பதினொரு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# நோயாளர், பார்வையாளர்களால் நிரம்பிவழியும் நான்குமாடி விடுதி

(கொக்குவில்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் நோயாளர்களினதும விடுதிகளில்களில் தங்கியுள்ளவர்களைப் பார்வையிடுவதற்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைப்பகுதியில் எற்கனவே இருந்த ஐந்து நோயாளர் விடுதிகளும் இடிக்கப்பட்டு புதிய கட்டிடங்களுக்கான நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அவ் விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்கள் புதிதாக அமைக்கப்பட்டிருந்த நான்கு மாடிக்கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டதை அடுத்தே அவ்விடுதி நோயாளர்களாலும் பார்வை யாளர்களாலும் நிரம்பி வழிவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு நோயாளரைப் பார்வையிட 10 க்கு மேற்பட்ட பார்வையாளர் செல்வதால் நோயாளர் விடுதி மாசடைவதாகவும் இதனால் நோயாளர் களின் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (68)

# உடற்பயிற்சிப் போட்டி

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டு சுட்டான் கோட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி நடைபெற உள்ளதாக ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆண், பெண் என இருபாலாருக்குமாக இப் போட்டிகள் நடாத்தப்பட உள்ளதாகவும், இப் போட்டிகள் ஒட்டு சுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளதாகவும் இதற்குத் தயாராகுமாறும் ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (42)

# எழுத்துருப்போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயத்திலுள்ள கரவெட்டி, பருத்தித்துறை கல்விக்கோட்ட பாடசாலை மாணவாகளுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கரவெட்டி கோட்டப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் பருத்தித்துறை கோட்ட போட்டிகள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர்கள் விண்ணபபபடிவங்களை இரட்டைப் பிரதிகளாக தயாரித்துக் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு உடன் அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

# தனியான இடத்தில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாஷையூர் மீன் சந்தைப் பகுதியில் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்திற்கு என தனியான இடத்தினை ஒதுக்கித் தருமாறு வியாபாரிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாஷையூர் சந்தைப் பகுதியில் நாளாந்தம் வரும் பொதுமக்களின் துவிச்சக்கரவண்டிகள் கடற்கரை வீதியில் இரு மருங்கிலும் விடப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட்டு வருகின்றது. இதனால் இவ வீதிப் போக்கு வரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட இவ்வீதியூடாகச் செல்லும் பேருந்துகளும் சந்தை நேரங்களில் சேவையினை மேற்கொள்வதால் மக்கள் பெரும் சிரமங்ளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குறித்த பகுதியிலுள்ள கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருபவர்களின் துவிச்சக்கரவண்டி களுக்கும் கூட கட்டணம் அறவிடப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இத்தகைய இடையூறுகளைப் போக்குவதற்கு தனியான ஓர் இடத்தில், பாஷையூர் சந்தைக்கு அருகாமையில் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத் தினை அமைத்துத் தருமாறு வியாபாரிகளும் பொதுமக்க ளும் கோரிக்கை விடுக்கின்றனர். (42)

# யாழ்ப்பாணம் - மன்னார் பயணத்துக்கு அரச பேருந்துகளை ஈடுபடுத்தவும்

## பயணிகள் கோரிக்கை

(அச்சுவேலி)

மன்னார் - யாழ்ப்பாணத்திற்கான சங்குப்பிட்டி - கேரதீவினூடாக போக்குவரத்து சேவையில் அரச பேருந்துகளும் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் பயணத்தினை இலகுவாக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் எனப் பொதுமககள் பலரும் விரும்புகின்றனர்.

மன்னார் - யாழ்ப்பாணத்திற்கான மேற்படி மார்க்கத்தினூடாக தற்போது தனியார் பேருந்துகள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை வழங்கி வருகின்றன. இதனால் சில சமயங்களில் இச் சேவைகள் தனப்பட்ட காரணங்களினால் ஸ்தம்பிதமடைகின்றமையால் பயணிகள் மன்னாரிலிருந்து வவுனியா ஊடாகவே யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் அதிக நேரத்தையும், கூடுதல் பணத்தையும் பயணத்திற்காகச் செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள் இவற்றைத் தவிர்க்கும் வகையில் அரச பேருநதுகளையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் என தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்துகின்றனர். (03)

# திடீரெனப் பெய்யும் மழையினால் விவசாயச்செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பல பகுதிகளில் திடீரெனப் பெய்யும் மழையினால் வெங்காயச் செய்கையும் புகையிலைச் செய்கையும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிககின்றனர்.

குறிப்பாக வலிகாமம் கிழக்குப் பகுதியிலும் வடமராடசியிலும் வெங்காய அறுவடை ஆரம்பித்துள்ள இந்நிலையில், இவ்வாறு பெய்யும் மழையினால் அறுவடை செய்யப்பட்ட வெஙகாயம் சேதமடைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சில பகுதிகளில் அறுவடை செய்த வெங்காயத்தினை விவசாயிகள் தறப்பாள்கள் மற்றும் படங்குகளைப் பயன்படுத்தி மழையிலிருந்து பாதுகாத்து வருவதை அவதானிக்க முடிகிறது.

கோப்பாய் நீர்வேலிப் பகுதிகளிலும் இம்மழையினால் புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறுவடை செய்து வெயிலில் உலரவைக்கப்பட்ட புகையிலைச் மழையில் நனைந்து பழுதடைவதாகவும் புகையிலைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (03,வி)

# உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான சித்திரப்போட்டி

(யாழ்ப்பாணம்)

2011 உலக மலேரியா தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சுடன் மலேரியா ஒழிப்புத்திட்டமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கனிஷ்ட பிரிவு தரம் 6, 8, சிரேஷ்ட பிரிவு 9,13 ஆகிய 2 பிரிவுகளில் நடத தப்படவுள்ளதுடன், 18x14 அளவுடைய சிததிரத் தாளில் வரைதல் வேண்டும். அத்துடன் நீர்ச்சாயம், எண்ணெய்ச்சாயம், பெஸ்டல் அல்லது கையில் படியாத ஏதாவதொரு வர்ணத்தைப் பயன்படுத்த முடியும்.

போட்டிக்குரிய தலைப்பாக 'மலேரியாவற்ற இலங்கை' அமைவதுடன் கீழ்க் குறிப்பிடும் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடியதாக சித்திரம் வரைதல் வேண்டும்.

இதில் மலேரியாவை இல்லாதொழிப்போம், மருந்து தடவிய நுளம்பு வலையினையிட்டுத் தூங்குவோம், உங்களுக்குக் காய்ச்சல், தலை வலி, உடம்புவலி, இருக்கிறதா? அது மலேரியா வாகவும் இருக்கலாம். தாமதிக்காது இரத்தப் பரிசோதனையைச் செய்து கொள் ளுங்கள்.

2014 ஆம் ஆண்டுகளில், இலங்கையில் இருந்து மலேரியாவை இல்லாதொழிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைவோம். மலேரியா நுளம்புகள் பரவுகின்ற இடங்களை அழிப்போம். நீங்கள் மலேரியா நோய் பரவியுள்ள நாட்டுக்குச் செல்வதாயின், மலேரியாவைத் தடுப்பதற்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சரியான முறையில் தொடர்ச்சியாக சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மலேரியாவைப் பூரணமாகக் கட்டுப்படுத்த முடியும். என்னும் கருத்துக்களில் சித்திரங்கள் வரையப்படுவதுடன், ஏதாவதொரு மொழியில் அக்கருத்தினைச் சித்திரத்தில் பொருத்தமான இடத்தில் குறிப்பிட வேண்டும்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடம் பெறுபவருக்கு 15 ஆயிரம் ரூபாவும், மூன்றாமிடம் பெறு பவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், 10 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஆறுதல் பரிசில்களும் அத்துடன், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டியாளர்கள் ஒரு ஆக்கத்தை மட்டும் சமர்ப்பிக்க முடியும். ஆக்கங்களின் பெயர், பாட சாலை, தரம், மாகாணம் என்பவற்றைச் சரியான முறையில் குறிப்பிட்டு பாடசாலை அதிபரினால் உறுதிபடுத்தி தபாலின் மேல் மூலையில் மலேரியா ஒழிப்புத் திட்டம் 'சித்திரப்போட்டி' எனக் குறிப்பிட்டு பாடசாலை சுகாதார மற்றும் போசாக் குக் கிளை, கல்வியமைச்சு, இசுருபாய, பத்தர முல்லை என்ற முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் பாடசாலைக் கொடிகளை ஏற்றிவைப்பதையும், மாணவன் ஒருவன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதற்கு தயாராகுவதையும், அருகில் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.செந்தூரன் நிற்பதையும் காணலாம்.

# மன்னார் - சங்குப்பிட்டி வீதி பெரும் சேதம் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து சங் குப்பிட்டி ஊடாக மன்னாருக் கான போக்குவரத்துச் சேவை கள் பாதைகள் சீரின்மையால் பெரும் காலதாமதத்திற்கு உள்ளாவதாகப் பயணிகள் கவ லையுடன் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் சங்குப்பிட்டி - கேரதீவு பாலம் திறந்து வைக் கப்பட்டதையடுத்து யாழ்ப் பாணத்திலிருந்து மன்னாருக்கான போக்கு வரத் துகள் இலகு படுத் தப்பட்டிருந்த போதிலும், வீதி கள் சீரின்றி, பாரிய குன்றும் குழியு மாகக் காணப் படுவதால், அதி களவான நேரம் பிரயாணத்தின் போது செலவா கின்றது.

குறிப்பாக சங குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த பகுதி களிலும் மற்றும் பூநகரிப் பகுதி யிலும் வீதியின் பல பகுதிகள் கடுமையான சேதத்திற்கு உள் ளாகியுள்ளமையால் இப் பயணத் திற்கு நாலரை முதல் ஐந்து மணித்தியாலம் வரையான நேரத்தைச் செலவிட வேண்டி யிருப்பதாகப் பயணிகள் பல ரும் கவலையுடன் தெரிவிக் கின்றனர். (03)

# வாழ்க்கைத்திறன் கற்கைநெறி தொழிற்திறனை விருத்தி செய்கிறது

## யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ தலைவர்

(யாழ்.நிருபர்)

மாணவர்கள் மத்தியில் சுய நம்பிக்கையை ஏற்படுத்தி நேர் முகத் தேர்வினைத் தயக்க மின்றி எதிர்கொண்டு, தொழி லொன்றுக்குத் தம்மை முழுமை யாகத் தயார்படுத்திக் கொள்வ தற்கு இக்கற்கை நெறி பெரி தும் உதவுகிறது.

இவ்வாறு யாழ். பல் கலைக்கழக வணிக முகாமைத் துவ இறுதியாண்டு மாணவர்க ளுக்கு நடைபெற்ற 'வாழ்க்கைத் திறன்' தொழில் நுழைவுக் கற்கைநெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் குறிப்பிட் டார்.யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையகத்தில் செல்வி. ஜே.உதயதர்சிகா தலை மையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் -

கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்று வந்த இக் கற்கை நெறி மூலம், மாணவர்களி டையே ஒரு நடத்தை மாற் றத்தை உணரமுடிகிறது.

அவர்களிடையே சுயநம்பிக் கையையும் நேர்முகத் தேர்வுக ளுக்குத் தயக்கமின்றிச் செல்லக்கூடிய மனோபாவத் தையும் தொழிற் திறனையும் இக்கற்கைநெறி ஏற்படுத்தி யுள்ளது. அதனை அவர்களின் அண்மைக்கால நடத்தை மூலம் அறிந்து கொள்ளக்கூடி யதாகவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்த பேராசிரியர், தொழில் திறன் வல்லுநர்களிடம் எமது மாணவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியானது வேலை உல கிற்கு அவர்களைச் சிறந்த முறையில் தயார்படுத்தி யுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடந்த நான்கு வருடங்களாகக் கற்று வந்த காலத்தில் ஏற்படாத நல்ல மாற் றங்கள் இந்த ஒரு மாத பயிற்சி நெறியூடாக எமது மாணவர் களிடையே ஏற்பட்டுள்ளது என வும் பயிற்சியை வழங்கிய பேராசிரியர்கள், தொழில் வல்லுநர்களுக்கு நன்றியைத் தெரிவித்து உரைநிகழ்த்தி னார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், கலாநிதி சிறிகந்தையா, Venarable Banagala upatissa Thero தலைவர் மகாபோதி இலஙகை சமூக அமைப்பு உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். (10)

# பழுதடைந்த மீன் விற்பனை பாவனையாளர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

கொட்டடி மீன் சந்தையில் பழுதடைந்த மீன் கள் விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித் தனர். மாலைவேளையில் விற்கப்படும் மீன்களே அதிகளவில் பழுதடைந்து காணப்படுவதாகத் தெரி விக்கப்பட்டது. அதனைவிட குளிரூட்டப்பட்ட மீன்க ளும் இச் சந்தையில் அதிகளவில் விற்கப்படு கின்றன. (வி)

# அலகுரீதியான பரீட்சை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம் பராக் கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி பயி லும் மாணவர்களுக்கு கணக்கீடு பாடத்தில் அலகு ரீதியாக 12 பரீட்சைகளை நடத்தத் திட்ட மிடப்பட்டுள்ளதாக கல்லூரி அதி பர் வி.நற்குணலிங்கம் அறிவித் துள்ளார்.

பரீட்சைகளை நடத்தி மாண வர்களுக்கு புள்ளியிடப்பட்ட பரீட்சை விடைத்தாள்களும் புள் ளிப் பட்டியலும் வழங்கப்பட வுள்ளது.

இப்பரீட்சை தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று பெற் றோர் மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரு கிறது. பரீட்சையின் பின்னர் மாணவர்களின் பாடமுன்னேற் றம் தொடர்பாக அதிபர், ஆசி ரியர்கள் கருத்துக்கூறவுள்ள தாகவும் அவர் தெரிவித் தார். (109)

# கொழும்புத்துறை வீதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் திருடர்க ளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தத் திருட்டுச் சம்பவங்கள் பட்டப்பகலிலேயே இடம்பெறுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிததனர்.

மக்கள் குடியிருக்காத வெறும் காணிகளில் இருக்கும் பயன்தரும் மரங்களைத் தறித்து களவாடிச் செல்வதோடு, தென்னைமரங்களில் இருக்கும் தேங்காய்களையும் களவாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுவாமியார் வீதி, வளபுரம், புங்கங்குளம் வீதி போன்ற பகுதிகளிலேயே இந்தத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. (வி)

## ஆதினியின் இன்றைய பலன்

(29.03.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 15

இராகுகாலம் 3.13 – 3.43, சுபநேரம் 10.43 – 12.13

தசமி பி.ப.12.12, திருவோணம் பி.இ.5.34,

சித்தம் , கரிநாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பிரச்சினைக்குத் தீர்வு, அன்பானவர் உதவி, கலகலப்பு.

**ரிஷபம்:–** தொழிலில் பிரச்சினை, காரியத்தடை, அலைச்சல்.

**மிதுனம் :–** பெரியோர் ஆதரவு, நிலை உயர்தல், மேலாளர் உதவி.

**கடகம்:–** உயர்வான எண்ணம், கற்பனை மிகுதி, குடும்ப மகிழ்ச்சி.

**சிம்மம்:–** பகைவர் உதவி, காரிய சித்தி, போட்டிகளில் வெற்றி.

**கன்னி :–** செலவு குறைவு, அதிகலாபம், மகிழ்ச்சிப் பெருக்கு.

**துலாம் :–** தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி, பயணம்.

**விருச்சிகம்:–** தனதானிய விருத்தி, தெய்வ வழிபாடு, காரிய சித்தி.

**தனுசு:–** போற்றப்படல், மதிப்புயர்வு, அதீத கற்பனை.

**மகரம்:–** அதிக செலவு, மனக்குழப்பம், முரண்படல்.

**கும்பம் :–** கற்பனை மிகுதி, பெரும்போராட்டம், மனக் குழப்பம்.

**மீனம்:–** தற்பெருமை, நண்பர் சேர்க்கை, பயணம்.



# குறள் சொல்லும் கதைகள் -34

இன்பத்துப் பால்

## நானும் குவளை

கஜேந்திரனை நான்கு தினங்களாகக் காணாமையால் தவித்துப் போனான் நகுலன். கடிதத்தை வாங்கும்போது இரண்டு தினங்களில் பதில் வாங்கித் தருகிறேன். என்று கூறிவிட்டுச் சென்ற கஜேந்திரனைக் காணாமல் நகுலனின் இதயம் வாடிச் சோர்ந்துவிட்டது. அர்ச்சகாவின் எழுத்துக்கள் எப்படி இருக்கும். அழகிய முத்துப்போன்ற அவளது பற்களை ஒத்திருக்குமா? இல்லை அவளது கூர்மையான வேல் போன்ற விழிகளை ஒத்திருக்குமா? அவனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

தன்னைப் பற்றி வித்தியாவிடம் விசாரித்ததில் இருந்தும், அன்று பார்த்துச் சிரித்ததில் இருந்தும் அவள் தன்னை விரும்புவதைத் தெரிந்துகொண்ட நகுலன் அவளது எழுத்தின் அழகைக் கண்டு ரசிக்க ஆவல்பட்டான். கடிதத்தைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்ற கஜேந்திரனின் நீண்ட பிரிவு அவனுக்குத் துக்கத்தைக் கொடுத்தது.

ஆவல் மிகுதியால் கஜேந்திரனைத் தேடி அவனது வீட்டிற்குச் சென்றான். அங்கு அவனைக் காணவில்லை. அதன்பின் நான்குமுறை அவனது வீட்டிற்குச் சென்றான். அவ்வேளையிலும் அவனைக் காண முடியவில்லை. அதன் பின் நான்கு தினங்களும் காலையும், மாலையும் கோயிலுக்குச் சென்றான். கஜேந்திரன் கோயிலுக்கு வரவில்லை.

அன்று காலை எப்படியும் அவனது வீட்டில் தங்கியிருந்தாவது அவனைக் கண்டு கொள்ள வேண்டுமென நினைத்து வீட்டுக்குச் சென்றான். இதற்கு முன்பு தனது மகன் எங்கு சென்றான் எனத் தனக்குத் தெரியாது எனக் கூறும் அவனது தாயார் அன்று அவன் வயலுக்குச் சென்று விட்டதாகக் கூறினார்.

நகுலன் முன்பு கஜேந்திரனுடன் அவனது வயலுக்குச் சென்றிருக்கிறான். நீண்டதூரம் வெள்ளத்துள் வரம்பால் நடந்து செல்வது அவனுக்குப் பிடிக்காது. ஆனால் அன்று அவனுக்கு வெள்ளத்தைக் கடப்பது சிரமமாகத் தோன்றவில்லை.

விரைவாக வரம்பால் நடந்து சென்று குளக்கரையை அடைந்தான். குளத்தில் மலர்ந்திருந்த குவளை மலர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் கஜேந்திரன். நகுலன் வந்து சிறிது நேரம் கஜேந்திரனைப் பார்த்துக் கொண்டு நின்றான். கஜேந்திரனுக்கு இவ்வுலக நினைவு இருக்கவில்லை. குளத்தையே வெறித்து நோக்கியபடி இருந்தான்.

"கஜேந்திரன்" என்று அழைத்தபடி நகுலன் கஜேந்திரனது தோளைப் பற்றினான். திடுக்கிட்டு நிமிர்ந்த கஜேந்திரன் நகுலனைக் கண்டுவிட்டு, "நீயா.... வயலுக்கு வருவது உனக்குப் பிடிக்காதே. எப்படி வந்தாய்" என்று கேட்டான்.

இரண்டு மூன்று தினங்களில் அர்ச்சகாவிடம் இருந்து கடிதம் வாங்கித் தருவதாகக் கூறினாய். அதன் பின் உன்னைக் காணவில்லை. பலமுறை உனது வீட்டுக்குச் சென்றும், உன்னைச் சந்திக்க முடியவில்லை. இன்றுதான் நீயிருக்கும் இடம் தெரிந்தது. நீ இருக்கும் இடம் சந்திரமண்டலம் என்றாலும் அங்கு நான் வந்திருப்பன் என்றான் நகுலன்.

"வித்தியா தனது வீட்டுக்கு என்னை வரவேண்டாம் என்றும், தான் கடிதத்தைக் கொண்டு வந்து தாறதாகவும் சொன்னாள். நேற்றுவரை வரவில்லை" என்றான் கஜேந்திரன்.

"நான் படும் வேதனை தெரியுந்தானே" அழுவதைப் போல சொன்னான் நகுலன்.

"அதற்கு நான் என்ன செய்வது? காதலியைக் காண முடியாதவர்கள் இயற்கையில் தமது காதலிகளைக் கண்டு மகிழலாம். இந்தக் குளத்திற்கு நான் வருவது எனது காதலியின் அங்கங்களின் பொலிவைக் காணுவதற்காகத்தான். காதல் கொண்டவனின் கண்களுக்கு அழகான மலர்களெல்லாம் காதலியின் அழகான முகத்தைப்போலவே தோன்றும். அர்ச்சகாவை நினைத்துக்கொண்டு இந்தக் குளத்தில் மலர்ந்திருக்கும் குவளை மலர்களைப் பார். அவளது கண்களைப் போலத் தாம் இல்லையே என்று வெட்கப்பட்டுக் குவளை மலர்கள் தம் தலையைக் கவிழ்ந்திருப்பது போல உனக்குத் தெரியவில்லையா? ஒரு முறை அருவி வெட்டிய பின் என்னுடன் வித்தியா இக் குளத்தைப் பார்க்க வந்தாள். குளத்தில் உள்ள அத்தனை குவளை மலர்களும் அவளது கண்களைக் கண்டு நாணித் தமது தலைகளைக் கவிழ்த்து விட்டன" என்றான் கஜேந்திரன்.

**கே.வி.குணசேகரம்**

"காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண் ஒவ்வோம் என்று." (குறள் - 1114)

இவளது கண்களைப் போல நாம் இல்லையே என வெட்கப்பட்ட குவளை மலர்கள், இவளைக் கண்டதும் நாணப்பட்டுத் தலை கவிழ்ந்து நிற்கும்.

# பாகிஸ்தான் நலனுக்காக நாடு திரும்புவேன்

### முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் அறிவிப்பு



பாகிஸ்தானின் நலனுக்காக வாவது நான் பாகிஸ்தானுக்குத் திரும்பியாக வேண்டும். நாடு இனி மதத் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கிவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. அதற்காகவே நான் பாகிஸ்தான் செல்ல விரும்புகிறேன் என்று பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

டைம் பத்திரிகைக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் இக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் மிகவும் பயங்கரமான நாடுதான் என்பதை நான் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். ஆனால் உலகிலேயே மிகவும் பயங்கரமான நாடு ஆப்கானிஸ்தான் தான்.

பாகிஸ்தானுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் எது? மதவாதிகள் மூலமான பயங்கரவாதமா, இந்தியாவா என்று கேட்டால் இப்போதைக்கு மதவாதிகள் மூலமான பயங்கரவாதம் தான என்று சொல்வேன். ஆனால் இந்த இரண்டையும் ஒப்பிட முடியாது. இந்தியாவால் பாகிஸ்தானுக்கு உள்ள நிரந்தர அச்சுறுத்தலைக் குறைத்து மதிப்பிடவே முடியாது.

இந்தியாவில் உள்ள ராணுவத்தின் 90 சதவீத பேருக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு என்பது தான் முதல் பாடமாகக் கற்றுத் தரப்படுகிறது. இந்தியாவைப் புறக்கணிக்கவோ மறக்கவோ முடியாது. பாகிஸ்தானுக்கு இந்தியாவால் எப்போதுமே ஆபத்துத்தான்.


மக்களுடைய கிளர்ச்சியால் தான் எகிப்திலும், துனிசியாவிலும் ஆட்சியாளர்கள் பதவி விலக நேர்ந்தது. அவ்விரு நாடுகளுக்கும் முன்னால் இது பாகிஸ்தானில் தான் தொடங்கியது என்றெல்லாம் கூறக் கூடாது. இந்த ஒப்பீட்டை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். பாகிஸதானில் நானாகவேதான் பதவியிலிருந்து இறங்கினேன். என்னை எகிப்து, துனிசிய அதிபர்களோடு ஒப்பிடாதீர்கள்.

லிபியாவில் இப்போது கடாபியை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் ஆயுதம் ஏந்தி சண்டையிட்டு வருகிறார்கள்.

பாகிஸ்தான் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்காக நான் மீண்டும் நாடு திரும்புவேன். பாகிஸ்தானைக் காப்பாற்றுவதற்காகவே நான் தேர்தலில் போட்டியிடுவேன். அந்த நாட்டை 9 ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆட்சி செய்தேன். பாகிஸ்தானின் பிரச்சினைகள் என்னென்ன என்று எனக்கு நன்றாகத் தெரியும். இப்போது பாகிஸ்தான் திணறிக்கொண்டிருக்கிறது.

எனக்காக இல்லாவிட்டாலும் பாகிஸ்தானின் நலனுக்காகவாவது நான் பாகிஸ்தானுக்குத் திரும்பியாக வேண்டும். நாடு இனி மதத் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கிவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது என்றார் அவர்.

# இங்கிலாந்தில் பழமையான மனித மூளை கண்டுபிடிப்பு



(லண்டன்)

இங்கிலாந்தில் 2500 ஆண்டு பழமைவாய்ந்த மனித மூளை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள பார்க் பல்கலைக் கழகத்தின் வளாகத்தை விரிவாக்கம் செய்வதற்காக அங்கு மண்ணைத் தோண்டும் போது அங்கு புதைக்கப்பட்டிருந்த ஒரு மனித உடலின் மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டது.

மண்டை ஓட்டின் மேற்புறத்தில் உள்ள மிருதுவான சதைப் பகுதிகள் அனைத்தும் மக்கி மண்ணாகி இருந்தன.

ஆனால் மூளை மட்டும் அப்படியே இருந்தது. மஞ்சள் நிறத்தில் சுருங்கிக் கிடந்தது. இந்த மூளை கடந்த 2500 ஆண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட மனித உடலுக்குரியது என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அதே வேளையில், இவ்வளவு மிக நீண்ட காலமாக மூளை எவ்வாறு பழுதடையாமல் இருந்தது என விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

# புகைபிடிப்பதற்கு சீனாவில் தடை

பொது இடங்களிலும் புகைபிடிப்பதற்கு மே மாதம் முதல் தடை விதிப்பதற்கு சீன அரசு முடிவு செய்துள்ளது

சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் 12 லட்சம் பேர் புகை பிடிபபதால் ஏற்படும் நோய்களுக்கு பலியாகிறார்கள்.

அதனை அடுத்த இந்தத் தீர்மானத்திற்கு சீனா வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகிலேயே மிகப்பெரிய சிகரெட் தயாரிப்பாளராக சீனா இருக்கிறது. இந்த நாட்டில் 30 கோடிக்கும் அதிகமானவர்கள் புகை பிடிக்கிறார்கள்.

வணிக நிறுவனங்கள் புகை பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை அந்தப் பழக்கத்தில் இருந்து விடுவிக்க உதவ வேணடும் என்றும் சீன அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

# ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது



(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த அதிர்வு 6.5 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதால் இங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் கடும் சேதம் ஏற்பட்டது. சுமார் 27 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக ஜப்பானில் உள்ள அணுமின் நிலையத்தில் உள்ள 6 அணு உலைகள் வெடித்துச் சிதறிப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், நேற்றும் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்றுக் காலை 7.23 மணியளவில் கிழக்குக் கடற்கரையில் உள்ள ஹானீ நகரில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டது. அச்சம் அடைந்த மக்கள் வீடுகள் கட்டிடங்களை விட்டு வெளியேறினர்.

இந்த நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஹானீ கடலில் சுமார் 1.6 அடி உயரத்துக்கு அதிகமாக அலைகள் எழும்பியது. 6.5 ரிக்டர் அளவில் இந்த நில நடுக்கம் பதிவாகி உள்ளதாகவும், இது பூமிக்கு அடியில் 5.9 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்படடதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று

# இலங்கை, நியூசிலாந்து பலப்பரீட்சை



(கொழும்பு)

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் இலங்கை - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறக் கடுமையாகப் போராடும். இதனால் இவ்வாட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இலங்கை அணி தனது சொந்த மண்ணில் விளையாடுவதால் கூடுதல் பலத்துடன் உள்ளது. அந்த அணி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் மட்டுமே தோற்றது. நியூசிலாந்து அணியை ஏற்கனவே லீக் ஆட்டத்தில் வெற்றிபெற்றது. இதனால் இலங்கை அணி அதிக நம்பிக்கையுடன் காணப்படுகிறது. துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என 3 துறைகளிலும் அந்த அணி சமபலத்துடன் காணப்படுகின்றது.

தொடக்க வீரர்கள் தில்சான், தரங்கா மற்றும் அணித் தலைவர் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் துடுப்பாட்டத்திலும் மலிங்கா, முரளிதரன், மெண்டிஸ், மத்தியூஸ் ஆகியோர் பந்து வீச்சிலும் நல்ல நிலையிலுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான காலிறுதியில் அந்த அணி அபாரமாக வென்று இருந்தது. இதனால் நியூசிலாந்தை வீழ்த்தி 3ஆவது முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற முடியும் என்ற நம்பிக்கையில் இலங்கை உள்ளது. 1996ஆம் ஆண்டு கிண்ணத்தைவென்ற அந்த அணி, கடந்த உலகக் கிண்ணத் தொடரின் (2007) இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையுடன் ஒப்பிடுகையில் நியூசிலாந்து சற்று பலவீனமான அணி தான். ஆனால் கால் இறுதியில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்தது. இதனால் அந்த அணியை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அந்த அணி லீக் ஆட்டங்களில் அவுஸ்ரேலியா அணிகளிடம் தோல்வியடைந்தது. ஆனால் பாகிஸ்தானை வெற்றிகொண்டது.

நியூசிலாந்து அணியில் விக்கெட் விழுந்தால் சரிய ஆரம்பித்து விடும். இது அந்த அணியின் பலவீனம். தொடக்க ஜோடியின் ஆட்டம் அந்த அணிக்கு மிகவும் முக்கியமாகும். மக்கலம், குப்தில், ரெய்லர், ரைடர் ஆகியோர் துடுப்பாட்டத்திலும், சவுத்தி, ஜேக்கப் ஓரம், நேதன் மக்கலம் ஆகியோர் பந்து வீச்சிலும் நல்ல நிலையிலுள்ளனர்.



முதல் முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் ஆர்வத்தில் நியூசிலாந்து உள்ளது. இதுவரை 5 முறையும் அந்த அணி அரையிறுதியில் தோற்றிருந்தது. எனவே, இப்போட்டியில் வெல்வதற்காக இரு அணிகளும் இறுதி வரை போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### இரண்டாவது அரையிறுதி நாளை

**இந்தியா எதிர் பாகிஸ்தான்**

மைதானம் : மொகாலி
பகலிரவு ஆட்டம்

### பாகிஸ்தான், நியூசிலாந்துக்கு அதிக வாய்ப்பு

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகள் மோதும் என்று பாகிஸ்தான் முன்னாள் பயிற்சியாளர் ஜெப் லாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் சில சிறந்த ஆட்டங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த அணி வீரர்கள் நம்பிக்கையுடன் நல்ல நிலையில் தெரிகிறார்கள். பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகள் இறுதிப் போட்டியில் மோத வாய்ப்புள்ளது.

இரண்டு அரையிறுதிப் போட்டிகளும் மிகவும் சவால் நிறைந்த போட்டியாக அமையும். லீக் சுற்றில் இலங்கை அணியிடம் நியூசிலாந்து அணி தோல்வியுற்றிருப்பால் அரையிறுதிப் போட்டியில் வென்று பழிதீர்த்துக்கொள்ள முற்படும் என்றார்.

# முடியும் என்ற நம்பிக்கையுள்ளது

(கொழும்பு)

பொதுவாக நாங்கள், "எங்களால் இதனைச் செய்ய முடியும்" என்ற நம்பிக்கை உடையவர்கள். அந்த அடிப்படையில் இன்றைய அரையிறுதியில் அதை வெளிப்படுத்த விரும்புகிறோம் என நியூசிலாந்து அணியின் துணைத் தலைவர் ரெய்லர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: நியூசிலாந்து அணி விளையாடும் போதெல்லாம் பெரும்பாலான நேரங்களில் குறைத்து மதிப்பிடுகிறார்கள். இதுவும் ஒரு வகையில் எங்களுக்கு மகிழ்ச்சி தான். நிறைய அணிகள், அரையிறுதியில் நாங்கள் தோற்கடிக்கப்படுவோம் என்று எதிர்பார்க்கின்றன. இத்தகைய குறைவான கணிப்பை சாதகமாக எடுத்துக் கொண்டு, இலங்கையை தோற்கடிப்போம் என்று எதிர்பார்க்கிறேன்.

எங்கள் அணியின் உத்வேகம் நல்ல நிலையில் இருக்கிறது. களத்தில் நாங்கள் செயற்படும் விதம் மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இலங்கைக்கு எதிரான ஆட்டத்திலும் இதே போல் தொடர்ந்து நெருக்கடி கொடுப்போம் என்று நம்புகிறேன்.


காலிறுதியில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்தோம். இந்த ஆட்டத்தின் மூலம் நாங்கள் நிறைய நம்பிக்கையை பெற்றுள்ளோம். இலங்கைக்கு எதிரான லீக் ஆட்டத்தில் நாங்கள் சில தவறுகள் செய்துவிட்டோம் அரையிறுதியில் அத்தகைய தவறுகளைத் திருத்திக்கொள்வோம் என்று நம்புகிறேன். உலக கோப்பையில் 6-வது முறையாக அரையிறுதிக்கு முன்னேறியதை நினைத்து பெருமைப்படுகிறோம் என்றார்.





**நடைபெற்று வருகின்ற உலகக் கிண்ணப் போட்டித் தொடருடன், சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ள முத்தையா முரளீதரனை நேற்றையதினம் பாராட்டி, இங்கிலாந்து முன்னாள் கிரிக்கெட் அணியின் தலைவர்களான இயன் பொத்தம் மற்றும் மைக்கல் வோன் ஆகியோர் நினைவுச் சின்னம் ஒன்றை வழங்குவதைக் காணலாம்.**

## நடுவர்கள் அறிவிப்பு





(டுபாய்)

உலகக் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கான நடுவர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று நடக்கும் இலங்கை- நியூசிலாந்து இடையிலான முதலாவது அரையிறுதிக்கு கிறிஸ் பிராட் போட்டி நடுவராக இருப்பார். ஸ்டீவ் டேவிஸ், அலீம் தர் கள நடுவர்களாகவும், மராஸ் இராஸ்மஸ் 3ஆவது நடுவராகவும் பணியாற்றுவார்கள். நாளை நடைபெறவுள்ள இந்தியா-பாகிஸ்தான் மோதும் 2ஆவது அரையிறுதிக்கு ரஞ்சன் மடுகல்லே போட்டி நடுவராகப் பணியாற்றுவார். சைமன் டபல், இயான் கவுல்டு கள நடுவராகவும், பில்லி பவுட்டன் 3ஆவது நடுவராகவும் செயற்படுவார்கள்.

# சதங்களை விட...

(மொகாலி)



சதங்கள் அடிப்பதை விட அணியின் வெற்றி தான் முக்கியம் என்று பாகிஸ்தான் வீரர் மிஸ்பா உல்-ஹக் தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னைப் பொறுத்தவரை எல்லா அணிக்கும் முக்கியமான விடயம் வெற்றி தான். நாங்கள் இத்தொடரில் இன்னும் சதங்கள் அடிக்காவிட்டாலும், உலகக் கிண்ணத்தை வென்றால் அது தான் எங்களுக்கு மகிழ்ச்சியான, சிறந்த விடயம்.

அதே சமயம் சதங்கள் விளாசி, உலகக் கிண்ணத்தை விட்டு வெளியேற்றப்படும் போது, சதங்களால் என்ன பயன்? ஒரு அரைச்சதமோ அல்லது கடைசி நேரத்தில் 20 அல்லது 30 ஓட்டங்களோ அடித்தாலோ கூட அது அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தால் அதுவே அணிக்குப் போதுமானது. ரி-20 போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் விட்ட தவறுகளை இப்போட்டியில் நாங்கள் விடமாட்டோம்.

பாகிஸ்தான் பிரதமர் கிலானி இந்த ஆட்டத்தைப் பார்க்க வருவது நல்ல விடயம். இதனால் எங்களுக்கு நெருக்கடி இல்லை. அவர் எங்களுக்கு ஆதரவாக இருந்து உதவுவார் என்றார்.

# இந்தியாவுக்கு நெருக்கடி



(கராச்சி)

உள்ளூரில் விளையாடுவதால் கூடுதலான நெருக்கடி இந்தியாவுக்குத்தான் இருக்கும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ரமீஷ் ராஜா தெரிவித்தார்.

நாளை நடைபெறவுள இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான அரையிறுதி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா துடுப்பாட்டத்தில் பலம் வாய்ந்தது. பாகிஸ்தான் பந்து வீச்சு நன்றாக இருக்கிறது. இதனால் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கும், பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கும் இடையே கடும் போட்டி இருக்கும். எந்த அணி தோற்றாலும் கடுமையாகப் போராடித்தான் தோற்கும். இந்திய அணி உள்ளூரில் விளையாடுவதால் நெருக்கடி கூடுதலாக இருக்கும்.

அதிக எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு விளையாட வேண்டிய நிலை இந்தியாவுக்கு உள்ளது. இதனை பாகிஸ்தான் அணி சதாகமாக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அதிகம் பாகிஸ்தானுக்கு இருக்கும் என்றார்.

# வெற்றியே குறிக்கோளாக இருக்கவேண்டும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவிப்பு

அ.தி.மு.க கூட்டணியில் இருக்கும் கட்சிகள் வெற்றி ஒன்றே குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று தே.மு.தி.க கட்சியின் தலைவரும் நடிகருமான விஜய காந்த் தெரிவித்துள்ளார்

தமிழகம் பெரியபாளையம் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது இதனை அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் - தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது மரங்களை வெட்டிப்போட்டார்கள். 20 ஆண்டுகள் கழித்து பசுமை தாயகம் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக என்னால் சொல்ல முடியும். இருக்கிற அரசியல்வாதிகளில் நான் யோக்கியமானவன்தான். போன தேர்தல் அறிக்கையை கதாநாயகன் என்றும், இந்த தேர்தல் அறிக்கையை கதாநாயகி என்றும் தி.மு.க.வினர் கூறுகின்றனர். அதை ஒத்துக்கொள்கிறேன்.

அப்படி என்றால் என்றும் மக்களின் வில்லன் தி.மு.க.வினராகிய நீங்கள்தான். தி.மு.க. மட்டும் பொதுமக்களுக்கு நல்லது செய்திருந்தால் இத்தனை கட்சிகள் இங்கு தோன்றியிருக்காது என்றார்.

கோடிகளை வாங்கிக்கொண்டு விஜயகாந்த் கூட்டணி வைத்துக்கொண்டார் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் நான் கோடிகளுக்காக கூட்டணி வைக்கவில்லை. மீண்டும் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காகத் தான் கூட்டணி வைத்தேன். மின்வெட்டு இல்லா தமிழகம் வேண்டும், விலைவாசி உயர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றுதான் கூட்டணி வைத்தேன். அ.தி.மு.க. கூட்டணிக் கட்சியினருக்கு வெற்றி ஒன்றே குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்



## உள்துறைச் செயலர்கள் சந்திப்பு

இந்தியா - பாகிஸ்தான் இரு நாட்டு உள்துறைச் செயலாளர்கள் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இந் தியச் செயலர் ஜி.கே.பிள்ளையும், பாகிஸ்தான் செயலர் சௌத்ரி கமார் சமானுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு நேற்று இந்தியத் தலைநகர் டில்லியில் நடைபெற்றுள்ளது

மும்பையில் இடம்பெற்ற பயங்கர வாதத் தாக்குதலுக்குப் பின்னர் இரு நாட்டு அரச முக்கியஸ்தர்கள் சந்தித்து கலந் துரையாடுவது இதுவே முதற் தடவையாகும். மும்பையில் இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் வழக்கு விசாரணையை பாகிஸ்தானில் விரைவு படுத்துவது, பயங்கரவாதிகளின் முகாம்களை அழிப்பது, மீனவர்கள் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று மாலை 5 மணி வரை நடை பெற்ற சந்திப்பில் இரு நாட்டுக் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

## இந்தியர்களின் மரண தண்டனை ரத்து பாகிஸ்தானிய நீதிமன்றம் அறிவிப்பு

பாகிஸ்தானியர் ஒருவரைக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 8 இந்திய இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்றம் ரத்துசெய்துள்ளது.

கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கு அந்த இளைஞர்களின் சார்பாக இந்திய ஹோட்டல் அதிபர் ஒருவர் நிதி உதவி அளித்ததைத் தொடர்ந்து ஷார்ஜா நீதிமன்றம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

2009 ஜுலை 11-ம் தேதி இந்த கொலை இடம்பெற்றது இதையடுத்து இந்தியாவைச் சேர்நத எட்டு இளைஞர்களும் பாகிஸ்தானைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கு ஹோட்டல் அதிபர் எஸ்.பி.சிங் ஒபராய் நிதி உதவி அளித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மரண தண்டனையும் ரத்துச் செய்யப்பட்டு 10 பேரும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று நீதி மன்றம் உத்தர விட்டிருக்கின்றது.

## கூட்டணியில் விஜயகாந்தைச் சேர்த்ததால் ஜெயலலிதா அவஸ்தைப்படுவதாக தெரிவிப்பு



(சென்னை)

விஜயகாந்தை கூட்டணியில் சேர்த்து ஜெயலலிதா அவஸ் தைப்படுகிறார் என்று நடிகர் வடிவேல் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - விஜயகாந்த் எங்கே போனாலும் நான் விட மாட்டேன். மதுரை மாவட்டத்துக்காரரான அவர் சொந்த ஊரில் போட்டியிடவில்லை. அதற்கான தைரியம் அவருக்கு இல்லை. நானும் மதுரை மாவட்டக்காரன்தான்.

கடந்த சட்டசபைத தேர்தலில் 234 தொகுதிகளில் விஜயகாந்த் கட்சி போட்டியிட்டது. விருத்தாசலம் தொகுதியில் மட்டும் அவர் வெற்றி பெற்றார். விருத்தாசலம் மக்கள் ஏமாந்தது போல ரிஷிவந்தியம் தொகுதி மக்கள் ஏமாறமாட்டார்கள்.

கடந்த 5 ஆண்டும் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்து விஜயகாந்த் ஆற்றிய பணிகள் என்ன? எத்தனை மணிநேரம் பேசினார் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டப்பேரவையில் அவர் எந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார் என்பது கூட யாருக்கும் தெரியாது.

அந்த அளவுக்கு சட்டப் பேரவைப் பக்கமே அவர் எட்டிப்பார்க்கவில்லை. அரசியலுக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை. விஜயகாந்துக்கு படங்கள் இல்லை. நடிக்க வாய்ப்பு இல்லை. சொந்தமாக படம் எடுத்தார். அதுவும் ஓடவில்லை. எனவேதான் நடிப்பதை நிறுத்தி விட்டு அரசியலில் குதித்துள்ளார்.

அப்பாவி ரசிகர்களை கட்சித் தொண்டர்களாக்கி ஏமாற்றுகிறார். விஜயகாந்தை கூட்டணியில் சேர்த்து ஜெயலலிதா அவஸ் தைப்படுகிறார் என்று வடிவேல் தெரிவித்தார்.

## தேர்தல் விதியை மீறியதாக குஷ்பு மீது வழக்குத் தாக்கல்



தேர்தல் விதிமுறைகளை மீறியதாக நடிகை குஷ்பு மீது இரண்டு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேனி மாவட்டத்தில் பழனிச்செட்டி பகுதியில் தி.மு.க.வுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும்,

இரண்டாவது வழக்கு அனுமதி பெறாமல் .குஷ்புவின் வாகனத்தைத் தொடர்ந்து 8 கார்கள் வந்தது தொடர்பாகவும் அந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


## சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பிபெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.

ICC Cricket World Cup 2011

1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?

பெயர்: ........................................

முகவரி : ........................................

விடைகள் : 01) ........................................

02) ........................................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.


## அ.தி.மு.க. ஆட்சியில் ஒருபாலமும் கட்டப்படவில்லை

ஜெயலலிதா ஆட்சியில் இருந்த காலத்தில் சென்னையில் ஒருபாலத்தைக் கூடக் கட்டவில்லை, மக்களின் போககுவரத்து வசதியை மேம்படுத்த ஒரு திட்டத்தையும் சென்னையில் செயற்படுத்தவில்லை என்று துணை முதலமைச்சர் மு.க.ஸடாலின் தெரிவித்தார்.

தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அதனை அவர் தெரிவித்தார்.

ஆனால், கலைஞர் ஆட்சியில் பல மேம்பாலங்களும், ரயில்வே மேம்பாலங்களும், சுரங்கப்பாதைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னையின் வருங்கால போக்குவரத்து நிலையை கருத்தில் கொண்டு, மெட்ரோ ரயில் திட்டம் கலைஞரால்தான் கொண்டு வரப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்குத் தேர்தல் மட்டுமே மக்களைச் சந்திப்பவர்கள் அல்ல நாங்கள். மக்களின் தேவைகளை அறிந்து அதைத் தொடர்ந்து செயறபடுத்தும் வகையில் எப்போதுமே செயற்பட்டு வருபவர்கள் நாங்கள்.

2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அளவிட முடியாத சாதனைத் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாக தலைவர் கலைஞர் உறுதியளித்துள்ளார்.

ஏராளமான நலத்திட்டங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு வருகின்ற கலைஞர் தலைமையிலான ஆட்சியில் நிறைவேற்றப்படவுள்ளது. கலைஞர் மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. கலைஞர் சொன்னால் அதை நிச்சயம் செய்து தருவார் எண்ற நம்பிக்கை அனைத்துத் தரப்பு மக்களிடமும் உள்ளது.

எண்ணற்ற திட்டங்களை அனைத்துத்தரப்பு மக்களும் ஏற்றம் பெறும் வகையில் செயது தந்துள்ளதால், ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் கலைஞர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தி.மு.க வின் தேர்தல் அறிக்கையை அடுத்து, தனது தேர்தல் அறிக்கை என்று கூறியுள்ள ஜெயலலிதாவை மக்கள் நம்பமாட்டார்கள். காரணம் அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது இலவச மின்சாரத்தை ரத்து செய்தவர், ஏழைகளின் வாழ்வாதாரமான ரேஷன் அரிசியின் விலையை உயர்த்தியவர்.

அரசு ஊழியர்களை கொடுமைப்படுத்தியவர். போக்குவரத்து ஊழியர்களை சிறையில் தள்ளியவர். ஜெயலலிதாவின் தொழிலாளர் விரோத போக்கையும், எதேச்சாதிகாரப் போக்கையும் நிச்சயமாக உண்மையான கம்யூனிஸ்ட் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

தேர்தல் நேரத்தில் மட்டுமே மக்களைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பவர் ஜெயலலிதா. மற்ற நேரங்களில் மக்களைச் சந்திக்காமல் கொடநாட்டில் ஓய்வெடுப்பவர்.



கடந்த 5 ஆண்டுகளாக ஓய்வெடுத்தே தனது நாட்களை நகர்த்தியவர். தற்போது தேர்தல் வந்தவுடன் மக்களை ஏமாற்ற நாடகமாடுகிறார். நிச்சயமாக நீங்கள் என்றும் உழைக்கும் கலைஞரைத்தான் ஆதரிப்பீர்கள் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. கடந்த கால ஜெயலலிதா ஆடசியில் எந்த விதமான தொழில் முதலீடுகளோ, புதிய தொழிற்சாலைகளோ, தமிழகத்தை நோக்கி வரவில்லை.

சென்னையில் ஜெயலலிதா ஆட்சியில் ஒரு பாலம் கூட கட்டப் படவில்லை. மக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த ஜெயலலிதா ஒரு திட்டத்தையும் சென்னையில் செயற்படுத்தவில்லை. ஆனால், கலைஞர் ஆட்சியில் பல மேம்பாலங்களும், ரயில்வே மேம்பாலங்களும், சுரங்கப் பாதைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# கருணா குழுவினர் கடத்தியதாக தெரிவித்த சாட்சியத்தில் உண்மையில்லை

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

திருக்கோவில் விநாயகபுரம் பகுதியில் வைத்து தமது பிள்ளையை கருணா குழுவினர் கடத்திச் சென்றதாக அம்பாறையில் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவில் தாயார் ஒருவர் தெரிவித்த கருத்தில் உண்மையில்லை என்றும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இந்த அறிக்கையில் நான் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியது முதல் ஆயுத கலாசாரத்தில் நம்பிக்கையிழந்து எமது மக்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அரசியலில் பிரவேசித்து எமது மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றேன்.

குறித்த காலப்பகுதியில் எனது முகாம் எதுவும் அப்பகுதியில் இயங்கவில்லை. அத்துடன் சீலன் என்பவரோ அல்லது ஜுட் என்பவரோ எமது கட்சியில் இல்லை. நான் சுதந்திரக்கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டது தொடக்கம் அக்கட்சியின் உறுப்பினராகவே செயற்பட்டு வருகின்றேன்.

அத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட இருவரும் இப்பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடாக இப்பகுதியில் இயங்கி வந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அத்துடன் பாரதி என்பவருக்கும் எனக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இல்லை. அவர்களை நான் இயக்கியதும் இல்லை. அவர்களுடன் எந்தத் தொடர்பினையும் பேணியதும் கிடையாது.

இந்த நிலையில் குறித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் இவ்வாறான கருத்துக்கள் தெரிவித்தமை தொடர்பில் எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் இந்தச் சம்பவத்துக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

தற்போதும் புனர்வாழ்வு முகாம்களில் வாடிக்கொண்டிருக்கும் வடக்கு,கிழக்கு இளைஞர்களை மீட்பதற்கு பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதுடன் அவர்கள் சமூகத் துடன் இணைக்கப்படும் வரை அவர்களுக்குத் தேவையானவற்றை மேற்கொள்வதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றேன்.

இவ்வாறான நிலையில் கடத்தவோ அல்லது ஒருவரைத துன்புறுத்தவோ வேண்டிய தேவை எனக்கில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு விசேட கடன் வசதி



(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்பட நாட்டிலுள்ள சகல மீனவர்களுக்கும் ஆழ்கடலில் மீன்பிடிப்புக்குத் தேவையான வசதிகளை அரசாங்கம் செய்து கொடுப்பதுடன் இலங்கை வங்கியினூடாக அதற்கென விசேட கடன்களையும் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் மீன் தேவையில் 45 வீதத்தை வடக்கு கிழக்கே எமக்குப் பெற்றுத்தந்தது. கடந்த யுத்த காலங்களில் அது ஏழு வீதமாக வீழ்ச்சியுற்றமையே மீன் விலை அதிகரிக்கக் காரணமானது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மீண்டும் சுதந்திரமாகத் தொழில் செய்யும் சூழலை உருவாக்க முடிந்தமை மீனவர்களுக்கான பெரும் சேவையாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நான் கடற்றொழில் அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் மீனவர்களோடு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தவும் அவர்களுக்கான சகல தேவைகளையும் பெற்றுக்கொடுக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுக்கான வீட்டுத்திட்டம் முதல் சமுத்திர வள பல்கலைக் கழகம் வரை என்னால் நடைமுறைப்படுத்த முடிந்தது. மீன்பிடி உபகரணங்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சகல திட்டங்களையும் அப்போது எம்மால் மேற்கொள்ள முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய ஜயலத் ஜெயவர்த்தன தமிழகம் விஜயம்



(கொழும்பு)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக தமிழகத்திலுள்ள அதிகாரிகள் மற்றும் அமைப்புக்களுடன். பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இன்று தமிழகத்திற்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே இவ்விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இந்த விஜயம் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்

நாளுக்கு நாள் மீனவர் பிரச்சினை சிக்கலாகிக் கொண்டே போகின்றது நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய கடப்பாடு ஐக்கியதேசியக் கட்சிக்கு இருக்கின்றது.

அங்கு அரச துறை அதிகாரிகள், மீனவர் அமைப்புக்கள மற்றும் கத்தோலிக்க மதகுருமாரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளேன். இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் ரோலர்களை பயன்படுத்தி மீன்பிடிப்பதால் எமது மீன்வளம் பாதிக்கப்படுவதாக இலங்கை மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் பேச்சுக்களின் போது கவனம் செலுத்தப்படும். சர்வதேச கடல் சார் உடன்படிக்கைகளை கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும். தேசிய சர்வதேச ரீதியில் எழுந்துள்ள இப்பிரச்சினையை நட்புறவுடன் தீர்ப்பதற்காக எதிர்க்கட்சி என்ற ரீதியில் எமது பங்களிப்பை வழங்குவோம் என்றார்.

# 6ஆயிரம் மாணவர்களின் பெறுபேறு குறித்து பரிசீலனை



(கொழும்பு)

கடந்தவருடம் நடைபெற்ற கல்விப்பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் ஆறாயிரம் மாணவர்களின் பரீட்சை முடிவுகளை வெளியிடுவது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் போது முறைகேடான வகையில் பரீட்சை எழுதிய மாணவர்கள் தொடர்பாக பரீட்சை கண்காணிப்பு நிலைய அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளுடன் தொடர்புபட்ட மாணவர்களுடைய பரீட்சைப் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை. இவ்வாறு 6000 மாணவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டதன் பின் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# ஆட்டநிர்ணய சதிக்கு இடமளிக்கக்கூடாது பாகிஸ்தான் வீரர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பாகிஸ்தான் வீரர்கள் ஆட்ட நிர்ணய சதிக்கு இட மளிக்கக் கூடாது என்றும் இந்த விடயம் தொடர்பாக உன்னிப் பாக அவதானிக்கப்பட்டுவரு வதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மலிக் எச்சரித்துள்ளார்.


இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டி நாளை மொஹாலி நகரில் நடைபெறவுள்ள நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி வீரர்கள் தூய்மையானவர்கள் என்பது தனக்கு உறுதியாகத் தெரியும் என்ற போதிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் குறித்து புலனாய்வுத் தகவல்கள் திரட்டபடுவதாகவும் அத்துடன் அவ்வீரர்கள் யாரைச் சந்திக்கிறார்கள், யாருடன் தொலைபேசிகளில் உரையாடல்கள் மேற்கொள்கின்றார்கள் என்ற விடயங்களும் அதற்குள் அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியினருக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று இந்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் தெரிவித்தமைக்கு அவர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குங்கள்

## ரணிலிடம் கோரிக்கை



(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு வருட காலத்துக்கு ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குமாறு கங்காராம விகாரையின் தேரர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கங்காராம விகாரையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திர கூடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில கங்காராம விகாரையின் பிரதம மதகுரு கலபொட ஞானிஸ்ஸர தேரர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் பல அபாண்டமான குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன. அவற்றை எதிர்கொள்ள இலங்கையில் ஜனாதிபதியினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியம்.

இருவரும் ஒன்றிணைந்து செயற்படும் போது இலங்கையை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வது மிகச் சுலபமான விடயம். அதன் காரணமாக கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

ஜப்பானின் அனுபவம் நமக்கொரு நல்ல பாடம். இவ்வுலகில் எதுவும் நிரந்தரமில்லை. எனவே அதனை மனதில் கொண்டு நாட்டை முன்னேற்ற இருவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அரச தனியார்துறை ஊழியருக்கு சலுகை விலையில் வீடுகள்

(கொழும்பு)

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசமற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 19 ஏக்கர் நிலத்தில் 830 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகள் ஒன்பது இலட்சத்து 85 ஆயிரம் ரூபா வீதம் சலுகை விலைக்கு அரசாங்க மற்றும் தனியார் ஊழியர்களுக்கு விரைவில் வழங்கப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்

காணியுடன் சேர்ந்ததான இவ் வீடுகளுக்கு தவணை அடிப்படையிலோ அல்லது வங்கிக் கடன் மூலமோ பணத்தை செலுத்த முடியும். இவ்வீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு நேற்று முதல் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும் என்று வீடமைப்பு பொது வசதிகள் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# சந்தை விவகாரத்தில் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தே தீர்வு காணப்படும்

### பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவிப்பு



(விசுவமடு)

விசுவமடு பிரதேசத்தில் இயங்கி வருகின்ற இரண்டு சந்தைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் பிரதேச மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தே மேற்கொள்ளப்படும் என ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி முரசுமோட்டையிலுள்ள கரைச்சிப் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதனை அவர் தெரிவித்தார்.

விசுவமடு பிரதேசத்தில் கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் ஒரு சந்தையும், முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் ஒரு சந்தையும் என இரண்டு சந்தைகள் இயங்கி வருகிறது. எனவே தான் இந்த விவகாரத்திற்கு அப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு அவற்றுக்கு மதிப்பளித்தே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும், அதேவேளை தூர நோக்கு சிந்தனையுடன் எதிர்கால நகரதிட்டமிடல் அபிவிருத்தி போன்ற விடயங்களும் கவனத்தில் எடுக்கபபட்டு இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் வடமாகாண உள்ளூராட்சி கூட்டுறவு கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி, கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் திருமதி அருட்சோதி, கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக ஆய்வு உத்தியோகத்தர் விமலநாதசர்மா, ஈ.பி.டி.பியின் நிர்வாகச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அ.இராசமாணிக்கம், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் எஸ்.பாலகிருஸ்ணன் ஜீவன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை அலுவலர்கள் மற்றும் பிரதேச மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கப்பல்களைத் தாக்கி அழித்ததில் இலங்கை கடற்படை சாதனை

### கடற்படைத் தளபதி பெருமிதம்



(கொழும்பு)

இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்றதன் பின்னர் எதிரிகளின் பெருமளவான கப்பல்களை அழித்த ஒரே கடற்படையாக இலங்கைக் கடற்படை விளங்குகிறது என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படைத்தளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே கடற்படைத் தளபதி திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்

இலங்கை ஒருதீவு. இலங்கையின் பாதுகாப்பில் கடற்படைக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. இப்போதுள்ள கடற்படை 1930களில் இருந்த கடற்படையோ அல்லது 1950ளில் இருந்த ரோயல் கடற்படையோ அல்ல. இது பெரும் பயங்கரவாத இயக்கத்தையே எதிர்கொண்டு வெற்றிகொண்ட கடற்படையாகும்" எனவும் அவர் தெரிவித்தார்.

# மரணப்பதிவுச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

### ஆணைக்குழுத் தலைவர் சி.ஆர்.டி சில்வா

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பாக முறையாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு முறையான மரணப் பதிவுச் சான்றிதழ் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுத் தலைவர் சி.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளாா.

கல்முனையில் நடைபெற்ற ஆணைக்குழுவின் அமர்வின் போது காணாமல் போன ஒருவரின் தாயார் எமக்கு மரணப்பதிவு சான்றிதழாவது கிடைக்கவழி செய்யமாட்டீர்களா என்று கேட்டபோது,இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பில் எமக்கு ஏகப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இங்கு பல தாய்மார்கள் அப்படி முறைப்பாடுகளைத் தெரிவிக்க வந்துள்ளனர். தயவு செய்து உங்கள் முறைப்பாடுகளை எம்மிடம் தந்து விட்டுச் செல்லுங்கள்.

நேரில் சாட்சியமளித்தால் தான் முறைப்பாட்டை ஏற்றுக் கொள்வோம் என்பதல்ல. மாறாக எம்மிடம் சமர்ப்பிக்கப்படும் அத்தனை முறைப்பாடுகளையும் உரியவர்களுக்கு அனுப்பி முடியுமான நிவாரணம் பெற்றுத் தருவோம். பாதிக்கப் பட்டவரை தேடிப்



பிடித்துத்தர உரியவர்களுடன் பேசுவோம். உயிரோடு இல்லாவிடில் அவ் இழப்புக்கான நஷ்டஈடோ அல்லது நிவாரணமோ பெற்றுத்தர முயற்சிப்போம். அதற்கிணங்க உரிய அமைச்சூடாக மரணபதிவுப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுகாதார மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

சுகாதாரம் குறித்த நான்காவது தெற்காசிய மாநாட்டை இம்முறை கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுகாதாரம் வாழ்க்கையை மேம்படுத்துகிறது என்ற தொனிப் பொருளில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 300 வெளிநாட்டுக் கல்விமான்களும், சுகாதார அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இலங்கை வரவுள்ளனர்.

அத்துடன் இந்த மாநாட்டில் உள்ளூர் அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் 150ற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாராளுமன்ற உறுப்பினருக்கு தொலைபேசி அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஆளுங்கட்சிப் பெண் பாராளுமன்ற உறுப்பினருக்கு இனந்தெரியாத நபர்களால் தொடர்ச்சியான தொலைபேசி அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த உபேக்ஷா சுவர்ணமாலி 18ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்து ஆளுங்கட்சிப் பக்கம் இணைந்து கொண்டார்

அண்மைக்காலமாக குடும்பத்தகராறு காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் அவர், தன்னைப் பாராளுமன்றத்திற்கு அழைத்து வந்து ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாய்வதற்கு திட்டமிட்டிருப்பதாக ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

தற்போது அவர் கட்சி மாறக் கூடாது என்றும் மாறினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அச்சுறுத்தும் வகையில் அனாமதேய தொலைபேசி அழைப்புகள் விடுக்கப்பட்டுவருவதாக ஹோமாகம பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இந்தத் தொலைபேசி மிரட்டல்கள் வந்த வண்ணம் உள்ளதாகவும் அதனால் தான் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்

அத்துடன் தனக்கு வந்த தொலைபேசி அழைப்பின் இலக்கத்தையும் அவர் பொலிசாருக்கு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# மருந்து விநியோகஸ்தர்கள் இடைநிறுத்தம் சுகாதார அமைச்சரின் திடீர் நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய மருந்து விநியோகஸ்தர்களிடம் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்வதை நிறுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

உரிய வேளைக்கு மருந்து விநியோகிக்கத் தவறியமை, தரமற்ற மருந்துகளை விநியோகித்தமை, கோரப்பட்ட தொகை மருந்துகளை முழுமையாக விநியோகிக்கத் தவறிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நோயாளிகளுக்கு உடனடியாகத் தேவைப்படும் மருந்துகளை அதிகவிலைகொடுத்தாவது ஏனைய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யுமாறும் சுகாதாரப் பணிப்பாளருக்கு அமைச்சர் சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் மாதாந்தக் கூட்டத்தின் போது அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு குறித்து ஆராயப்பட்டபோது இத்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

# ஆணைக்குழு முன்னிலையில் ஹக்கீம் சாட்சியமளிக்கமாட்டார்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சாட்சியமளிக்கமாட்டார் என அக்கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாட்சியங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்திற் கான விஜயத்தின் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சாட்சியமளிப்பார் என அக்கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகாவின் செயலாளர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளராக செயற்பட்ட கப்டன் சேனக சில்வா மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை பணிக்கமர்த்தியிருந்த குற்றச்சாட்டின் பேரின் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். 408 நாட்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

நேற்று இவருக்கெதிரான வழக்கு விசாரணை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஒரு இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அவர் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லாத வண்ணம் இவரின் கடவுச்சீட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மாதம் தோறும் இரகசியப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு வருகை தந்து கைச்சாத்திட வேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

# இன்று செய்யவேண்டிய செயலை நாளை எனத் தட்டிக்கழிக்கக்கூடாது

## உதயன் எம்.பி. அறிவுறுத்து



(யாழ்ப்பாணம்)

நாங்கள் இன்று செய்ய வேண்டியதை இன்றே செய்ய வேண்டும் நாளை செய்யலாம் என நினைத்துவிடக்கூடாது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின்(உதயன்) தெரிவித்தார்.

மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் தென்மராட்சி மகளிர் சங்கப்பிரதிநிதிகள் மற்றும் அங்கத்தவர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுடன் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இன்று செய்ய வேண்டியதை இன்றே செய்ய வேண்டும். நாளை செய்யலாம் என நினைத்துவிடக் கூடாது. எமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியைக் கொண்டு நானும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களும் ஈழமக்கள் ஜனநா யகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் மக்களிற்கான உதவிகளைச் செய்து வருகின்றோம். தொடர்ந்தும் உங்களது முன்னேற்றத்திற்கு எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராகவே உள்ளோம். எனவே எங்களுடன் இணைந்து செயற்படுவதினூடாகவே இது சாத்தியமாகும்.

பனை தென்னை வள உற்பத்திகளிற்கான நிலையங்கள், தையல் பயிற்சி நிலையங்கள், யாழ்கோ பாற்சபை என்பவற்றை உங்களது பிரதேசங்களிற்கு ஏற்படுத்தித்தருவேன். எனவே நீங்கள் அவற்றினை சிறந்த முறையில் செயற்படுத்த வேண்டும். நாங்கள் தருகின்ற நிதியைக்கொண்டு சுழற்சிமுறையான கடனுதவித்திட்டங்களை வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது கடனைப் பெறுகின்றவர்கள் அதனை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள், அதற்கான இலாபமீட்டும் செயற்பாடுகள் எவ்வாறுள்ளது என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சங்கங்களது தேவைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன் அச்சங்கங்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய செயற்பாடுகள் தொடர பாகவும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலின் போது ஈ.பி.டி.பியின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் வலன்ரைன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்களான சாள்ஸ், விஸ்வா ஆகியோரும் உடனிருந்தனர்.

# மொழிபெயர்ப்பாளர் பற்றாக்குறை நிவர்த்தி செய்வதற்குத் தீர்மானம்



(கொழும்பு)

மொழிபெயர்ப்பாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, மொழி பெயர்ப்பாளர் அமைப்பொன்றை நிறுவுவதற்கு அரச மொழியியல் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த அமைப்பின் ஊடாக ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், சிங்களத்திலிருந்து தமிழுக்கும், சிங்களத்திலிருந்து ஆங்கிலத்துக்குமான மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்த அமைப்பினூடாவே அரச தனியார் துறைகளுக்கான மொழிபெயர்ப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நடவடிக்கை ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஒத்திகை இடம்பெறவுள்ளதாக அந்த நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பலர் உயிரிழந்தனர்.

இதனால் மீண்டுமொரு அனர்த்தத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளவென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தொடர்ச்சியாக சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிவிவகார அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளராக கருணாதிலக அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார்.

சீனாவுக்கான இலங்கைத் தூதுவராக பதவி வகித்த அமுனுகம வெளிவிவகார அமைச்சில் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார் என வெளிவிவகார அமைச்சின் செய லாளர் சரத் திஸாநாயக்க தெரிவித்தார்

# சமூக வலைத்தளப்பாவனை சிறுவர்களுக்கு புதிய கட்டுப்பாடு

## புதிய யுக்திகளை கையாள ஆலோசனை

(கொழும்பு)

வீடுகளில் சமூக வலைத்தளங்களை சிறார்கள் பார்வையிடுவதை கட்டுப்படுத்துவதற்கு பெற்றோர்களை ஊக்குவிக்குமாறு தொலைதொடர்பு சேவை வழங்குநர்கள் கோரப்பட்டுள்ளதாக தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நேற்றுத் தெரிவித்துள்ளது.

ஓர் இணையத் தளத்தை சிறார்கள் பார்வையிடுவதை தடுப்பது வினைத்திறனானதாக மாட்டாது. ஏனெனில், சிறார்கள் தடைசெய்யப்பட்ட அந்த இணையத்தளத்தை பார்வையிடுவதற்கு வேறு வழிகளை கண்டறியக்கூடும் என தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனு' பெல்பிட்ட கூறியுள்ளார்.

சமூக வலைத்தளங்களை சிறார்கள் பார்வையிடுவதை தடுப்பதில் நாம் செய்யக்கூடியது அதிகமில்லை. எனவே தமது பிள்ளைகள் விரும்பத்தகாத இணையத்தளங்களை பார்வையிடுவதை பொருத்தமான கணினி மென்பொருட்களை பயன்படுத்தி கட்டுப்படுத்துமாறு பெற்றோர்களிடம் நாம் இணைய சேவை வழங்குநர்கள் மூலம் கோருகிறோம்.

சமூக வலைத்தளங்களை சிறார்கள் பயன்படுத்துவது தொர்பாக பெற்றோர், பொலிஸ், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உட்பட பல தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஏற்கெனவே நாம் 1000 இற்கும் அதிகமான இணையத்தளங்களை நீதிமன்ற உத்தரவின்பேரில் தடை செய்துள்ளோம் என அவர் கூறினார்.

இதேவேளை மிகப்பெரிய சமூக வலைத்தளமான பேஸ்புக் தினமும் 13 வயதுக்குட்பட்ட சுமர் 20, 000 சிறார்கள் அவ்வலைத்தளத்தை பயன்படுத்துவதை தடைசெய்து வருவதாக தெரிவித்துள்ளது.

### நல்லிணக்க...

மக்களிடம் சாட்சியங்களை பதிவு செய்யக் கிடைக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு நேற்று முன்தினம் கல்முனையிலும் கடந்த வாரம் மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய இடங்களிலும் சாட்சியங்களை பதிவு செய்துள்ளது என லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார். மக்களிடமிருந்து பெறப்பட்ட சாட்சியங்களைக் கொண்டு முடிவுத் திகதிக்கு முன்னர் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஒருங்கிணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார். நேற்று முன்தினம் கல்முனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் காணாமல்போன தமது உறவுகளை மீட்டுத்தரும்படியே அம்மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

### ஏ-9 வீதி....

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஏ-9 வீதி திருத்தம் மற்றும் நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடல்வழி போக்குவரத்திற்கான படகு, சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏ-9 தரைவழி பாதையின் திருத்தப் பணி களை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கித் தருவதாகவும் உடனடியாகவே திருத்தப் பணிகளை மேற்கொள்ளுமாறும் உரிய தரப்பினரிடம் பணிப்புரை வழங்கினார்.

அத்துடன் மக்களினதும் வாகனங் களினதும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், ஏ-32 கேரதீவு - மன்னார் வீதியை மாற்றீடாக பாவிக்கும் அதேவேளை ஏ-9 வீதியின் திருத்தப் பணிகள் துரிதமாகவும் செம்மையாகவும் மேற்கொள்ளப்பட வேண் டும் என்றும் அதன் பின்னர் ஏ-32 வீதியை யும் திருத்தம் செய்ய வேண்டுமென்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஜனாதிபதி அவர்கள் பணிப்புரை விடுத் துள்ளார்.

நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாது உள்ள ஏ-9 வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் பெரும் சேதமடைந்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் மக்களும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கதாகும்.இந்தச் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிறேமசிறி வீதி, அபிவிருத்தி அதிகார சபை திட்டப் பணிப்பாளர் வீரசிங்க உள் ளிட்ட மாகாண மற்றும் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்ட னர்

### இந்தியக்கடற்பரப்பில்..

சேர்ந்த மூன்று மீனவர் கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஊடகங்களில் வெளி யான தகவல்கள் ஆதார மற்றவை என்பதுடன் உண்மைக்கும் புறம்பானவையாகும். இந்தியக்கடற்பரப்பில் வைத்தே மேற்படி மூன்று இலங்கை மீனவர்களும், இந்தியக்கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு இந்தியக்கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்த மூன்று மீனவர்களையும், இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை இந்தியக் கடற்படையினர் முன்னெடுத்துவருகின்றன ரெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொழும்பு பெருநகர..

அதிகாரமும் அவருக்கு வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே வகிக்கும் பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கு மேலதிகமாகவே பிரஸ்தாப ஆளுனர் பதவியும் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக அவர் பல திணைக்களங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளார்.


நகர அபிவிருத்தி அதிகார சபை, தாழ்நில அபிவிருத்தி அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் என்பன தற்போது அவரது கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. அத்துடன் இன்னும் பல நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லங்கா (அப்பலோ) ஹொஸ்பிட்டல் மட்டுமன்றி பல பெருந் தோட்டங்களிலும் அவர் தற்போது முக்கியமான பங்குதாரராக மாறியுள்ளார். அத்துடன் மிகவிரைவில் இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான ஹற்றன் நஷனல் வங்கியும் அவரது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### அனல்மின்நிலையத்திற்கு...

455 மில்லியன் டொலர் செலவில் முதற் கட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் இங்கு 300 மெகாவாற் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது.

891 மில்லியன் டொலர் செலவிலான இரண்டாவது கட்ட கட்டுமானப் பணி களை சீனா மேற்கொண்டுவருகிறது.பெறுமதி வாய்ந்த இந்த அனல் மின்நிலையத்தின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் பொறுப்பு கடற்படையிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அனல் மின் நிலையத்தின் பாதுகாப்புத் தொடர்பாக அண்மையில் உயர்மட்டக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ள போதும், இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது இந்தப் பகுதிகளில் விரும் பத்தகாத சம்பவங்கள் இடம் பெறுவதை தடுக்கும் நோக்கில் கடற்படை யின் அணியொன்று பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்த்து. பின்னர் அது விலக்கிக் கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது



# நவீன முறையிலான நடவடிக்கைகள் ஊடாக கித்துள் பனைவளம் மூலம் உச்ச பயன்பெற முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கித்துள் மற்றும் பனை வளம் சார்ந்த உச்சப்பயன்பாடுகளையும் சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் நவீன முறையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.



கொழும்பு - நாரஹேன்பிட்டி அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற கித்துள் பனை வளம் சார்ந்த உற்பத்திகளினது கண்காட்சி மற்றும் விற்பனை சந்தை தொடர்பாக ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: எமது அமைச்சின் ஊடாக நாட்டின் பாரம்பரிய கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படும் அதே வேளை, கித்துள் மற்றும் பனைவளம் சார்ந்த உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன் அவற்றின் மூலமான உற்பத்திகளே பிரதான பங்கையும் வகிக்கின்றன.

நாட்டில் மூன்று மில்லியன் கித்துள் மரங்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும் தொண்ணூறாயிரம் மரங்களே பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று பனைமரங்களுடான பயன்பாடுகளை அதிகரிக்கும் நடவடிக்கைகளும் முன் னெடுக்கப்படும். முக்கியமாக நாடாளாவிய ரீதியில் கித்துள் மற்றும் பனைவளம் சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடுகளை மேம்படுத்தும் அதே வேளை, நவீன முறையிலான தொழில்நுட்பங்கள் ஊடாக துறைசார்ந்த தொழில்த்துறைகள் எமது அமைச்சின் ஊடாக மென்மேலும் அபிவிருத்தி செய்யப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஆர்.சமரசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதி அமைச்சர் வீரக்குமார திசாநாயக்க உரையாற்றும் போது, கித்துள் மற்றும் பனைவளம் சார்ந்த உற்பத்திகளை நவீன முறைப்படுத்தி அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம் எலிபன்ட் கவுஸ் நிறுவன இயக்குனர் நீல் சமரசிங்க ஆகியோர் உடனிருந்தனர்.

# கன்னத்தில் முத்தமிட்டார் சந்திரிகா; ரணிலுக்கு கிடைத்தது பிறந்தநாள் பரிசு

கடந்த வியாழக்கிழமை தனது 62 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடிய ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்டியணைத்து முத்தமிட்டது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஐ.தே.கவின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதற்கு மறு தினம் அவரின் 62 ஆவது பிறந்ததினம். பிறந்ததினத்தன்று ரணிலின் நெருங்கிய நண்பர் மலிக் சமரவிக்கிரம சினமன் கிரான்ட் ஆடம்பரவிடுதியின் கடலுணவு உணவகத்தில் இரவு விருந்து ஒன்றை ரணிலுக்கு வழங்கியிருந்தார்.

ரணிலின் மிக நெருங்கிய நண்பர்கள் அதில் கலந்து கொண்டிருந்தனர். அந்த விருந்தின் போது அங்கு நுழைந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணிலின் கன்னத்தில் முத்தமிட்டு, பிறந்ததின வாழ்த்தை தெரிவித்துள்ளார். அதன் பின்னர் அரசை எப்போது கவிழ்க்கப்போகிறீர்கள் எனவும் சந்திரிக்கா கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால் தன்னை பிறந்ததினத்தை கொண்டாடவிடும்படி ரணில் பதிலளித்திருந்தார். அதன் பின்னர் வெள்ளிக்கிழமை ரணில் தனது நண்பர்களுக்கு விருந்து ஒன்றை அளித்திருந்தார்.

# யாழ். மாவட்ட மாணவர்களுக்கு வழங்கவென ஒருதொகை சீருடைத்துணிகள் கையளிப்பு

யாழ். மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கவென ஒருதொகை சீருடைத்துணிகளை பொதுமகன் ஒருவர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிடம் கையளித்தார்.

கொழும்பு சீகுல் ரெசிடென்சீ தனியார் கம்பனியின் பணிப்பாளர் எஸ்.கிருபாஹரன் கடந்த சனிக்கிழமை இந்நன்கொடையை யாழ். தலைமையக கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிடம் பலாலியில் அமைந்துள்ள படைத் தலைமையகத்தில் வைத்து கையளித்தார்.

ஊர்காவற்துறையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பல குடும்பங்களை சாதாரண வாழ்நிலைக்கு கொண்டுவர இராணுவத்தினர் முயற்சியெடுத்து வருகின்றனர். இவ்வாறான உதவிகளை தமக்கு வழங்குவதன் மூலம் ஊர்காவற்துறையில் கல்வி அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டு மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவ முடியும் என மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்தார்.

நீண்ட நேர கலந்துரையாடலைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான கிருபாஹரன், நயினாதீவு நாகபூசணி அம்மன் பாடசாலை, ஊர்காவற்துறை ஓம் கும்பன் ஆரம்பப் பாடசாலை மற்றும் வேலணை வடகிழக்கு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 308 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்க முன்வந்துள்ளார்.

இந்த நன்கொடையைப் பொறுப்பேற்றுக் கொண்ட யாழ் கட்டளைத்தளபதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் வறிய மக்களுக்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நலன்புரிச் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

308 பிள்ளைகளுக்குமான தையற்கூலியையும் தாமே வழங்குவதாகவும் இரண்டு வாரத்தினுள் இந் நடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் கிருபாஹரன் தெரிவித்தார்.

## சர்வதேச...

நடத்த முடியாது கடந்த ஏழு வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களை விசாரிக்கும் வகையிலேயே நல்லிணக்க ஆணைக்குழு என்னால் நியமிக்கப்பட்டது. நல்லிணக்க ஆணைக்குழு தனது சேவைக்கான காலத்தை நீடிக்குமாறு கோரவில்லை. ஆனால் காலத்தை நீடிக்குமாறு கோரினால் அதற்கான அனுமதி வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களை அலரி மாளிகையில் நேற்று சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

லிபியா நிலைவரம் குறித்து கருத்து கேட்ட போது, எவரும் தமது நாட்டின் பிரஜைகளுக்கு தீங்கிழைக்க முடியாது. மக்களைக் கொல்லும் எவரும் அவர்களுடன் இருப்பவர்கள் அல்லர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை கொல்பவர்களுடன் நாம் இல்லை. அத்துடன் எந்த நாட்டினதும் இறைமையை மீற முடியாது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டபோதிலும், இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

எனினும் வரிச்சலுகை இழப்பை அடுத்தே தைத்த ஆடைகளுக்கான கேள்விகள் கூடியுள்ளன. அமெரிக்காகூட வரிச்சலுகையை நிறுத்தினாலும் அந்தச் சவாலையும், இலங்கை எதிர்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

# கைதடி நவீல்ட் பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையில் க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்த மாணவர்களின் நன்மை கருதி க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான முற்கூட்டிய நடவடிக்கைகள் அதிபரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியபோதிலும், ஒரு சில மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்திருந்தனர். அத்துடன் மாணவர்களும் தமது அங்கவீனம் காரணமாக கல்வியில் ஆர்வம் காட்டாத நிலைமை இருந்ததுடன், உயர்தர வகுப்புக்களை நடத்த எவரும் முன்வராத நிலைமையும் காணப்பட்டது.

இந்த நிலையில், கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்வி கற்பதற்கான தகுதி பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான உயர்தர வகுப்புக்களை நடத்த மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் விடுத்த வேண்டுகோளுக்கமைய வகுப்புக்கள் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# நல்லிணக்க ஆணைக்குழு அரசியல் நோக்கம் கொண்டது

## ஐ.தே.கட்சி குற்றம் சாட்டுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அரசின் அரசியல் அபிலாஷைகளை கருத்திற் கொண்டதாக மாத்திரமே காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் செயற்பாடுகளால் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமென நம்பிக்கை கொள்ள முடியாதென அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க எதிர்க் கட்சித் தலைவருக்கு இதுவரை அழைப்பிதழ் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

# நியூஸிலாந்து பிரதமருக்கு பதிலாக வருகின்றார் உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியை நியூஸிலாந்து பிரதமருக்குப் பதிலாக இந்தியாவிலுள்ள நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் நேரில் பார்வையிடவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பந்துல ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் இன்று நடைபெறவுள்ள இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியை பார்வையிட வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பு குறித்து நியூஸிலாந்துப் பிரதமர் சந்தோஷமடைந்தார்.

இருப்பினும் மாகாணங்களுக்கான பயணத்தை முடித்துக்கொண்டு தற்போதுதான் அவர் வெலிங்டனுக்கு வந்துள்ளார். இந்த நிலையில் அவருக்கு இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளுவதற்கு நேரமில்லையெனவும் அவர் கூறினார்.

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியை பார்வையிட வருமாறு நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீக்கு ஜனாதிபதி நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானுக்கு எவரும் செல்லலாம்; கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜப்பானுக்கு இலங்கையர்களை அனுப்புவதில் கட்டுப்பாடுகள் எ்துவும் விதிக்கப்படவில்லை என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும் அணுக்கதிர் வெளியேற்றம் குறித்த அச்சம் காணப்படும் பிரதேசங்களுக்கு இலங்கையர்களை அனுப்புவது குறித்து அவதானம் செலுத்துமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸிலி ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பான் புகுஷிமா அணு உலையில் வெடிப்பு ஏற்பட்டு கதிர்வீச்சுக்கள் வெளிப்படும் அச்சம் குறித்து அப்பிரதேச மக்களுக்கு விழிப்பூட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஜப்பானில் வசித்து வந்த இலங்கையர்கள் சிலர் அண்மையில் நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசு புலம்பெயர்..

செய்வதை விடுத்து நோர்வேயில் செயற்படுகின்ற புலி ஆதரவாளர்களின் செயற்பாடுகளை முறியடிக்க முன்வரவேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்துக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் அனுசரணை வழங்க தயாரென நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கூறியமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.